


**சாய் பக்தர்களுக்கு வணக்கம்**

இந்த ஸ்ரீ குரு சரித்திரம் சாய்பாபாவாலே சாடே என்ற பக்தருக்கும் மற்றவர்களுக்கும் ஸப்தாஹ பாராயணம் செய்ய வேண்டுமென்று போதனை செய்யப்பட்டது. (ஹேமாட் பந்த் எழுதிய சாய் ஸச்சரித்திரம் 18, 19 அத்தியாயங்களில்). ஆகையால் இதனுடைய மகிமையும் சக்தியும் அபாரமானது. சாய் பக்தர்களும், தத்த பக்தர்களும் தங்களின் இன்னல்களை, வியாதிகளை, குறைகளை தீர முக்தியும் பெற இந்நூலினை சப்தாஹமாக (ஏழு நாட்களுக்குள்) பாராயணம் (படிப்பது) செய்தால் அவர்களின் அனைத்து இன்னல்களும் தீர்ந்து தங்களின் கோரிக்கைகள் நிறைவேறி சுகமும் முக்தியும் பெறுவார்கள்.

ஸ்ரீ குரு சரித்திரம்

# ஸ்ரீ குரு சரித்திரம்



அகண்ட சாயி நாம சப்தாஹ டிரஸ்ட் (ப)

# ஸ்ரீ குரு சரித்திரம்

எழுதியவர்

**V. கனகசந்திரய்ய**

வெளியிட்டோர்

அகண்ட சாயி நாம சப்தாஹ டிரஸ்ட் (ப)

20/44, வெங்கடாசல செட்டி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

முதல் பதிப்பு 2008
இரண்டாம் பதிப்பு - 2010

© அகண்டசாயி நாம சப்தாஹ டிரஸ்ட் (ப)
சென்னை

**விலை ரூ. 90/-**

புத்தகங்களுக்காக

திரு. M.S. ராஜகோபாலன்
பிளாட் எண் 3, முரளி ஆனந்த் அபார்ட்மெண்ட்
65/62, அலமேலுமங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 044 - 2495 8675

திரு. V. ஸ்ரீசீனிவாசுலு
8/6B, AKR நகர், ஸ்ரீ தேவி குப்பம்,
வளசரவாக்கம், சென்னை - 600 087.
போன் : 044 - 2486 3628
செல் : 98409 99448

திரு. V. கனகசந்திரய்ய
செல் : 94440 80529.

அச்சிட்டோர்:

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை - 14
தொலைபேசி: 044-2813 2909



## உங்களுடன் ஒரு நிமிடம்....

ஓம் சாயி ஸ்ரீசாயி ஜெய ஜெய சாயி என்ற சாயி நாமத்தை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன் அகண்ட சாயி நாம சப்தாஹ டிரஸ்ட் 1994ம் ஆண்டு துவக்கப்பட்டது. அன்று முதல் சாயி நாம சங்கீர்த்தனத்தை சப்தாகமாகவும் (ஏழு நாட்கள்) திரையாகமாகவும் (மூன்று நாட்கள்) ஏகாஹமாகவும் (ஒருநாள்) இன்று வரை நடத்தப்பட்டு வருகிறது. 2003ம் ஆண்டு, 2008ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சீரடியில் அகண்ட சாயி நாம சப்தாஹ சங்கீர்த்தனம் நடத்தினோம்.

இந்த ஆன்மீக வழியில் ஆன்மீக புத்தகங்களை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அதன் வழியில் முதன் முறையாக இந்த 'ஸ்ரீகுரு சரித்திரம்' என்ற புனித நூலை தமிழில் அச்சிட்டு வெளியிடுகிறோம். இதை அச்சிட்டு வெளியிடுவதற்கு பொருள் உதவி செய்த பக்தரின் குடும்பத்தார் சீரடி சாயி, ஸ்ரீதத்தாத்ரேயரின் அருளும், ஆசியும் பெற்று சுகத்துடன் நீடுழி வாழ வேண்டுமென்று வேண்டுகிறோம்.

இந்த இரண்டாம் பதிப்பை அழகாக அச்சிட்டு தந்த ஏஷியன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. ப.செல்லப்பன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் சாயி சேவையில்
அகண்ட சாயி நாம சப்தாஹ டிரஸ்ட் (ப)
சென்னை - 600005

## இந்நூலினைப் பற்றி...

மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, மகேசன் அத்திரி மகாமுனிவரின் மனைவியான அனுசூயா தேவியின் பதிவிரத மகிமையை சோதனை செய்ய நினைத்து, பிட்சை கேட்கும் நோக்குடன் அங்கே சென்று அந்த அம்மையாரின் பதிவிரத மகிமையால் தங்களை வென்றதற்கு வரம் கேட்க சொல்ல அந்த அம்மையார் அவர்களையே தன் பிள்ளைகளாக பிறக்க வேண்டுமென்று வேண்ட அதே போல் தங்களை அவர்களின் பிள்ளைகளாக பிறக்கச் செய்து, பிறகு மூன்று பேரின் அம்சங்களினால் ஒன்றான பிள்ளைதான் ஸ்ரீதத்தாத்ரேயர். அந்த தத்தாத்ரேயர் தன்னை பூஜித்தவர்களின் துன்பங்களை போக்கி நன்மைகள் கொடுத்து காப்பாற்றினார். குரு மும்மூர்த்திகளின் அவதாரமானதால் இமயம் முதல் சேது வரை குருவை ''குருர் பிரம்மா: குருர்விஷ்ணு: குருர்த்தேவோ மகேஸ்வர: குருசாட்சாத் பரபிரம்ம தஸ்மை ஸ்ரீகுருவே நம:'' என்று துதிக்கிறார்கள். தத்தாத்ரேயர்லிருந்து தான் குரு பரம்பரை ஆரம்பமானது. அவரின் அடுத்த அவதாரங்கள்தான் 'ஸ்ரீபாத ஸ்ரீவல்லபராக' பீடிகாபுரத்திலும் (ஆந்திர மாநிலத்திலிருக்கும் பிடாபுரம்), ஸ்ரீநரசிம்ம சரஸ்வதியாக மகாராஸ்டிரத்தில் 'கரஞ்சா' என்ற ஊரில் பிறந்து வெகு நாட்கள் கானகாபுரத்தில் (இது கர்நாடக மாநிலத்தில் உள்ளது) இருந்து லீலைகளை காண்பித்து, அங்கே தங்களின் நிற்குண பாதுகைகளை பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீபாதஸ்ரீவல்லபர், ஸ்ரீநரசிம்ம சரஸ்வதிகளின் வரலாறு தான் இந்த ஸ்ரீகுருசரித்திரம்.

இந்த குரு சரித்திரத்தை ஸ்ரீநரசிம்ம சரஸ்வதியின் சீடரான ஸ்ரீகங்காதர சரஸ்வதி மராத்தியில் எழுதினார். பிறகு ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதி அவர்கள் (1854-1914) சமஸ்கிருதத்தில் எழுதினார். பிறகு பல மொழிகளில் பல பேர் எழுதினார்கள்.



முதலில் எழுதிய ஸ்ரீ கங்காதர சரஸ்வதி அவர்கள் இன்னல்களை போக்க முக்தி பெற குருபக்தர்களை இந்நூலினை பாராயணம் செய்யச் சொன்னார். இதை தினமும் காலையில் பாராயணம் (படிக்க) செய்யலாம். துன்பங்களும், ஆபத்து நேரங்களையும், வியாதிகளை போக்க, குறிப்பிட்ட வேண்டுதல் நிறைவேற சப்தாக பாராயணம் (ஏழு நாட்களுக்குள் படிக்கச் செய்தால்) அவர்களின் வேண்டுதல்கள் நிறைவேறும்.

தத்தாத்ரேயரின் குரு பரம்பரையில் அவதரித்த சத்குரு, யோகிராஜரான ஸ்ரீசீரடி சாய்பாபா தன் பக்தரான சாடே அவர்களை இரண்டு முறை இந்த குரு சரித்திரத்தை சப்தாக பாராயணம் செய்யச் சொன்னார் (சாய் ஸத் சரித்திரம் 18,19 அத்தியாயங்களில் உள்ளது) இதர பக்தர்களையும் பாராயணம் செய்யச் சொன்னதினால் இதன் மகிமை எல்லையற்றது என்று தெரியவருகிறது. ஆகையால் பக்தர்கள் இதனை பாராயணம் செய்து பயன்பெருமாறு வேண்டுகிறோம்.

## என்னை பற்றி...

"எவனொரு பக்தன் யோகிகளின் வரலாற்றை எழுத ஆசைப்படுகிறானோ அந்த பக்தனின் எண்ணம் நிறைவேறுமாறும், அந்த நூல்களை எழுதவும் யோகிகள் பல்வேறு வழிகளை கடைப்பிடிக்கிறார்கள். யோகிகளே அப்படிப்பட்ட செயலுக்கு தூண்டிவிடுவார்கள். அதை நிறைவேற்ற பக்தனை ஒரு காரணமாகச் செய்து அவரின் செயல்களை அவர்களே தொடருவார்கள்".

மகாராஷ்டிரத்தின் முதற்கவியும், யோகீச்வரனும் ஆன ஞானேச்வர் மகாராஜ் அவர்கள் மேலே கூறியது போல் இந்த ஸ்ரீகுருசரித்திரத்தை எழுத என் குருவான சீரடி சாயி பாபா என்னைத் தூண்டிவிட்டார்கள்.

என் தந்தை, காலம் சென்ற திரு V.சேஷய்ய நாயுடு அவர்கள் ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர். அவர் சிறு வயதிலே சென்னை வந்து வணிகம் செய்ய ஆரம்பித்தார். ஆகையால் நான் சென்னையிலேயே பிறந்தேன். நான் தெலுங்கு மொழியிலே சென்னையில் படித்தேன். அந்தக் காலகட்டத்தில் என் தந்தையார் நாங்கள் தமிழ்நாட்டில் இருப்பதால் தமிழைக் கற்றால் நன்றாக இருக்குமென்று நினைத்து இரு வருடாந்திர விடுமுறை நாட்களில் தமிழ் ஆசிரியை நியமித்து தமிழ் கற்பித்தார். அப்படி கற்றுக் கொண்ட தமிழை விளம்பரப் பலகைகள், திரைப்பட விளம்பரங்களை சிறிது, சிறிதாகப் படித்து தமிழ் படிப்பதை வளர்த்துக் கொண்டேன். பிறகு செய்தி தாள்களையும், கதைப் புத்தகங்களையும் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் எனக்கு தமிழ் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. இப்படி இருக்க 1994ம் ஆண்டு அகண்ட சாயி நாம சப்தாகத்தை தொடங்குவதற்காக தமிழில் அழைப்பிதழை எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுதான் நான் முதன் முதலில் தமிழில் எழுதியது.

மேலே கூறியது போல் சாயி பாபா என் மனதில் ஸ்ரீகுரு சரித்திரம் தமிழில் எழுதத் தூண்டுதல் செய்தார். நானோ தமிழை



அதிகம் படிக்கவில்லை. இருந்தும் சாயிபாபா கொடுத்த சக்தியினாலும், ஆற்றலினாலும் தமிழில் எழுத முற்பட்டேன். சாயிபாபாதான் இதை எழுதுகிறார். நானோ அவரின் எழுது கோள் (பேனா). ஏன் இப்படி சொல்கிறேன் என்றால் நான் எழுத உட்காரும் நேரத்தில் சாயிபாபாவை வணங்கி நீதான் எனக்கு சரியான வார்த்தைகளை மனதில் தோன்ற வைக்க வேண்டுமென்று வேண்டி எழுத ஆரம்பித்தால் தடை இல்லாமல் எழுத முடிகிறது. அப்படி வேண்டியும் சில நேரங்களில் சில வார்த்தைகள் மனதில் தோன்றுவதில்லை. அப்பொழுது சாயிபாபாவைப் பார்த்து சரியான வார்த்தையை தோன்றவை என்று வணங்கி வேண்டினால் அடுத்த கணமே வார்த்தைகள் தோன்றி எழுதி முடிப்பேன். பெரிதாக தமிழ் படிப்பறிவு இல்லாத நான் இப்படி ஒரு பெரும் ஆன்மீக நூலினை எழுத முடிந்ததென்றால் அது நான் எழுதியதல்ல. நான் வணங்கும் என் குரு சீரடி சாயி பாபா தான் என் கரத்தைப் பிடித்து எழுத வைத்து பெரும் புண்ணியத்தை ஈட்டிக் கொடுத்தார்.

நான் எழுதிய இந் நூலில் தவறுகள் இருந்தால் திருத்திக் கொடுக்கச் சொல்லி சீரடி சாயி பக்தரும், எழுத்தாளரும், எனது நண்பருமான திரு. L. பழனியப்பன் அவர்களை வேண்டினேன். என் வேண்டுதலுக்கு சம்மதித்து திருத்திக் கொடுத்ததற்கு அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நான் எழுதிய எழுத்து வடிவத்தை, அச்சக வடிவமாக செய்து கொடுத்த ப்ரைம் பிரிண்ட் சிஸ்டம் அச்சகத்தில் பணிபுரியும் திருமதி ரமணி அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தகத்தை எழுதுவதிலிருந்து அச்சிடும்வரை உதவிய அத்தனை பேருக்கும் ஸ்ரீதத்தாத்ரேயர், ஸ்ரீபாதஸ்ரீவல்லபர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி மற்றும் சீரடி சாயிபாபா எல்லா செல்வங்களும், நோயற்ற நீண்ட ஆயுளையும் கொடுத்து அருள் புரிய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

சாயிபக்தன்

**V. கனகசந்திரய்ய**

## பாராயணம் செய்யும் முறை

சாஸ்திரங்களில் சொன்னபடி, விதிகள் தவறாமல் பாராயணம் செய்தால் பலன் அதிகமாக இருக்கும். தங்களின் இன்னல்களை தீர்க்கவோ அல்லது குறிப்பிட்ட காரியம் நிறைவேறவோ பாராயணம் செய்ய நினைப்பவர்கள் சாஸ்திர விதிப்படி எவ்வளவு சிரத்தையுடன் பாராயணம் செய்கிறார்களோ அவ்வளவு பலன் கிடைக்கும். ஆகையால் பாராயணம் செய்ய நினைப்பவர்கள் நன்னாளிளோ, அல்லது வியாழக்கிழமையிலோ விடியற்காலையில் எழுந்து தலைக்கு ஊற்றிக் கொண்டு ஏதும் சாப்பிடாமல் பாராயணம் செய்யும் இடத்தை சுத்தமாக துடைத்து, இறைவனின் படத்தை பூக்களால் அலங்கரித்து, படைக்க (நைய்வேத்தியம்) பழம், தேங்காய் முதலியனவை அவர்கள் சக்திக்கேற்ப வைத்து கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக மனை மேல் உட்கார்ந்து விளக்கை ஏற்றி (முடிந்தவரையில் நெய் விளக்கு ஏற்றினால் நல்லது) குருசரித்திர புத்தகத்தை ஓர் மனை மீதோ அல்லது சுத்தமான துணியின் மீதோ வைக்கவேண்டும். முதலில் ஆசமனம் செய்து, பிறகு பிராணாயாமம், பிறகு தேச, கால துதி, சங்கல்பம் செய்ய வேண்டும்.

பஞ்சபாத்திரத்தில் நீரை எடுத்துக் கொண்டு உத்தரணியால் (ஒரு சின்ன கரண்டி) வலது கையில் நீரை ஊற்றிக் கொண்டு கையை கழுவி நீரை கீழே விடவேண்டும். பிறகு ஸ்ரீகேசவாய ஸ்வாஹ, நாராயணாய ஸ்வாஹ, மாதவாய ஸ்வாஹ என்று சொல்லி ஒவ்வொரு மந்திரம் சொல்லும் போது உத்தரணியால் வலது கையில் நீரை ஊற்றிக் கொண்டு பருக வேண்டும். மீண்டும் நீரை கையில் எடுத்துக் கொண்டு கீழே விடவேண்டும். பிறகு ஸ்ரீவிஷ்ணுவே நம: மதுசூதனாய நம: த்ரிவிக்ரமாய நம: வாமனாய நம: ஸ்ரீதராய நம: ஹ்ருஷிகேசாய நம: பத்மநாபாய நம: தாமோதராய நம: சங்கர்ஷநாய நம: வாசுதேவாய நம: ப்ரத்யும்னாய நம: அனிருத்தாய நம: புருஷோத்தமாய நம:



அதோக்ஷஜாய நம: நரசிம்மாய நம: அச்யுதாய நம: ஜனார்த்னாய நம: உபேந்திராய நம: ஹரயே நம: ஸ்ரீ கிருஷ்ணாய நம: என்று சொல்ல வேண்டும்.

அதன் பிறகு பிராணாயாமம் செய்ய ஒரு மூக்கை மூடிவிட்டு இரண்டாவது மூக்கினால் காற்றை மெதுவாக இழுத்துக் கொண்டு அதே நேரத்தில் மனதில் "ஓம் பூ ஓம் புவ:- ஓம் சுவ:- ஓம் மஹ:- "ஓம் ஜன:, ஓம் தப:, ஓம் சத்தியம்" என்று சொல்லி முடிப்பதற்குள் காற்றை முழுமையாக இழுத்து, பிறகு இரண்டு மூக்குகளை மூடி "ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோந: ப்ரசோதயாத்" என்று மனதில் சொல்லி முடித்த பிறகு "ஓம் அபோ ஜோதி ரஸோம்ருதம் பிரம்ம பூர்புவஸ்ஸுவரோம்" சொல்லிக் கொண்டு இரண்டாவது மூக்கு வழியாக காற்றை விட்டு விடவேண்டும்.

அதன் பிறகு பஞ்சாங்கத்திலிருந்து அல்லது தினசரி நாட்காட்டியிலிருந்து (தினசரி காலெண்டரில்) அன்றைய நாளின் விவரங்களை பார்த்துக் கொண்டு கீழே சொன்னது போல் தேச, கால துதியை செய்ய வேண்டும்.

ஸ்ரீ கோவிந்த கோவிந்த ஸ்ரீ மகா விஷ்ணுவின் ஆணைக்கிணங்க நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த பிரம்ம நாட்களின் இரண்டாவது பாகத்தில் ச்வேத வராஹ கல்பத்தில், வைவஸ்வத மன்வந்தரத்தில் கலியுகத்தின் முதற் பகுதியில், ஜம்புத்வீவில் பரத வருடத்தில், பாரத நாட்டில் மேரு மலைக்கு தெற்கு திசையில் ஸ்ரீசைலத்துக்கு கிழக்கு மேற்கு பகுதியில் கிருஷ்ணா - காவேரி நதிகளின் நடுவிலிருக்கும் நாட்டில் என் வீட்டில், சகல தேவதைகள், பிராமணர்கள், மற்றும் ஹரிஹரன் சந்நதியில் இப்பொழுது நடந்துக் கொண்டிருக்கும் நடப்பாண்டான சந்திரமானத்தில் .......... வருடத்தில் (அந்த வருட பெயர்)............. ஆயனத்தில் (உத்தாராயணம், அல்லது தக்ஷிணாயம் என்று

பார்த்துச் சொல்ல வேண்டும்) ................ ருதிவில் (ருதுவின் பெயர்) ................ மாதத்தில் (அன்றைய மாதப் பெயர்) .......... பிறையில் (தேய்பிறை அல்லது வளர்ப்பிறையாக இருப்பதைச் சொல்ல வேண்டும்) ................ திதியில் (அன்றைய திதியைச் சொல்ல வேண்டும்) ...................... கிழமையில் (அன்றைய கிழமையை சொல்ல வேண்டும்) .....................நட்சத்திரத்தில் (அன்றைய நட்சத்திரம் சொல்ல வேண்டும்) சுபயோக, சுபகரணங்களில் ஸ்ரீமான் ...................... கோத்திரம் கொண்ட (உங்கள் கோத்திரம் சொல்ல வேண்டும்) ................... என்ற பெயருடைய (உங்கள் பெயர்) நான் என் மனைவி / கணவன் உடன் எனக்கு ஸ்ருதி, ஸ்ம்ருதி புராணங்களில் சொன்ன புண்ணியம் கிடைப்பதற்கு, எல்லா இன்னல்கள் தீர்த்து.................. என்ற என் வேண்டுதல் (உங்கள் வேண்டுதலை சொல்ல வேண்டும்) நிறைவேற ஸ்ரீ தத்தாத்ரேய சத்குரு அருள் புரிய வேண்டுமென்று வேண்டி இந்த குரு சரித்திரத்தை பாராயணம் செய்கிறேன்!! என்று சொல்ல வேண்டும்.

பிறகு ஆசமனம் (நீரை கையில் ஊற்றிக் கொண்டு கீழே விடுவது) செய்து உங்களின் குலதெய்வம், தாய், தந்தையர்களை வணங்கி, ஸ்ரீ தத்தாத்ரேய அஷ்டோத்திரம் படித்து. பாராயணம் ஆரம்பித்து அன்றைய பாராயணம் செய்ய வேண்டிய பகுதியை முழுமையாகப் படித்து பூர்த்தி செய்ய வேண்டும். அப்படி ஒரே தடவையில் முடிக்க முடியவில்லை என்றால் காலையும், மாலையும் இரண்டு முறையாக படித்து முடிக்க வேண்டும். இரண்டு முறையும் குளித்து, ஆசமனம் , பிராணாயாமம், தேச, காலதுதியை சொல்ல வேண்டும். பாராயணம் முடியும் வரையில் விளக்கு எரிந்துக் கொண்டே இருக்க வேண்டும். அன்றைய பாராயணம் முடித்த பிறகு நைவேத்தியம் இட்டு, ஆரத்தி எடுக்க வேண்டும். பிறகு குருசரித்திர நூலைப் பட்டு துணியில் அல்லது நல்ல துணியில் சுற்றி பாராயணம் செய்யும் இடத்தில் (பூஜை அறையில்) வைக்க வேண்டும். அன்றைய பாராயணம் முடித்த பிறகு சாப்பிட வேண்டும். ஏழு நாட்கள்



பாராயணம் முடிந்த அன்று உங்கள் சக்திக்கு ஏற்றார்போல் பிராமணர்களுக்கு அல்லது ஏழைகளுக்கு தட்சினையைத் தானமாக கொடுக்க வேண்டும்.

இப்படி சாஸ்திரப்படி செய்ய முடியாதவர்கள் காலையில் குளித்து, சுத்தமாக, சாப்பிடாமல் தாங்கள் எண்ணிய எண்ணத்தை நிறை வேற வேண்டுமென்று வேண்டி பாராயணம் செய்யலாம்.

ஏழு நாட்கள் பாராயணம் செய்ய வேண்டிய அத்தியாயங்களின் விவரங்கள்

| | |
|---|---|
| முதல் நாள் | 1வது அத்தியாயத்திலிருந்து 9ம் அத்தியாயம் வரை |
| இரண்டாம் நாள் | 10வது அத்தியாயத்திலிருந்து 21ம் அத்தியாயம் வரை |
| மூன்றாம் நாள் | 22வது அத்தியாயத்திலிருந்து 29ம் அத்தியாயம் வரை |
| நான்காம் நாள் | 30வது அத்தியாயத்திலிருந்து 35ம் அத்தியாயம் வரை |
| ஐந்தாவது நாள் | 36வது அத்தியாயத்திலிருந்து 38ம் அத்தியாயம் வரை |
| ஆறாவது நாள் | 39வது அத்தியாயத்திலிருந்து 43ம் அத்தியாயம் வரை |
| ஏழாவது நாள் | 44வது அத்தியாயத்திலிருந்து புத்தகம் முடியும் வரை |

# ஸ்ரீதத்தாத்ரேய அஷ்டோத்தர சதநாமாவளி

ஓம் ஸ்ரீ தத்தாய நம:
ஓம் தேவதத்தாய நம:
ஓம் ப்ரம்மதத்தாய நம:
ஓம் விஷ்ணுதத்தாய நம:
ஓம் சிவதத்தாய நம:
ஓம் அத்திரிதத்தாய நம:
ஓம் ஆத்ரேயாய நம:
ஓம் அத்திரி வரதாய நம:
ஓம் அனசூயாயை நம:
ஓம் அனசூயாசூனவே நம:-10
ஓம் அவதூதாய நம:
ஓம் தர்மாய நம:
ஓம் தர்மபராயணாய நம:
ஓம் தர்ம பதயே நம:
ஓம் சித்தாய நம:
ஓம் சித்திதாய நம:
ஓம் சித்திபதயே நம:
ஓம் சித்தி சேவிதாய நம:
ஓம் குருவே நம:
ஓம் குருகம்யாய நம: - 20
ஓம் குரோர்குருதராய நம:
ஓம் கரிஷ்டாய நம:
ஓம் வரிஷ்டாய நம:
ஓம் மஹிஷ்டாய நம:
ஓம் மஹாத்மனே நம:
ஓம் யோகாய நம:
ஓம் யோககம்யாய நம:
ஓம் யோகதேசகராய நம:

ஓம் யோகபதயே நம:
ஓம் யோகீஸாய நம: - 30
ஓம் யோகாதீஸாய நம:
ஓம் யோகபராயணாய நம:
ஓம் யோகி தேயாங்க்ரி
பங்கஜாய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் திவ்யாம்பராய நம:
ஓம் பீதாம்பராய நம:
ஓம் ஸ்வேதாம்பராய நம:
ஓம் சித்ராம்பராய நம:
ஓம் பாலாய நம:
ஓம் பாலவீர்யாய நம: - 40
ஓம் குமாராய நம:
ஓம் கிஸோராய நம:
ஓம் கந்தர்ப்ப மோஹனாய நம:
ஓம் அர்தாங்காலிங்கி
தாங்கனாய நம:
ஓம் சுராகாய நம:
ஓம் விராகாய நம:
ஓம் வீதராகாய நம:
ஓம் அம்ரித வர்ஷினே நம:
ஓம் உக்ராய நம:
ஓம் அனுக்ராஹாய நம: - 50
ஓம் ஸ்தவீராய நம:
ஓம் ஸ்தவீயஸே நம:
ஓம் சாந்தாய நம:
ஓம் அகோராய நம:



ஓம் மூடாய நம:
ஓம் ஊர்த்வ ரேதஸே நம:
ஓம் ஏக வக்த்ராய நம:
ஓம் அனேக வக்த்ராய நம:
ஓம் த்விநேத்ராய நம:
ஓம் த்ரிநேத்ராய நம: - 60
ஓம் த்விபுஜாய நம:
ஓம் ஸட்புஜாய நம:
ஓம் அக்ஷமாலினே நம:
ஓம் கமண்டலுதாரினே நம:
ஓம் சூலினே நம:
ஓம் டமருதாரினே நம:
ஓம் சங்கினே நம:
ஓம் கதினே நம:
ஓம் முனயே நம:
ஓம் மௌனினே நம: - 70
ஓம் விரூபாய நம:
ஓம் ஸ்வரூபாய நம:
ஓம் ஸஹஸ்ரசிரசே நம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:
ஓம் ஸஹஸ்ரபாஹவே நம:
ஓம் ஸஹஸ்ராயுதாய நம:
ஓம் ஸஹஸ்ர பாதாய நம:
ஓம் ஸஹஸ்ர பத்மார்சிதாய நம:
ஓம் பத்ம ஹஸ்தாய நம:
ஓம் பத்ம பாதாய நம: - 80
ஓம் பத்மநாபாய நம:
ஓம் பத்ம மாலினே நம:
ஓம் பத்ம கர்பருணாக்ஷாய நம:

ஓம் பத்ம கிஞசல்க்கவர்சஸே நம:
ஓம் ஞானினே நம:
ஓம் ஞானகம்யாய நம:
ஓம் ஞான விஞானமூர்தயே நம:
ஓம் த்யானினே நம:
ஓம் த்யானனிஷ்டாய நம:
ஓம் த்யான ஸ்திமித
மூர்த்தயே நம: - 90
ஓம் தூளிதூஸரிதாங்காய நம:
ஓம் சந்தனலிப்த மூர்த்யே நம:
ஓம் பஸ்மோத்தூளித தேஹாய நம:
ஓம் திவ்ய கந்தானு லேபினே நம:
ஓம் ப்ரஸன்னாய நம:
ஓம் ப்ரமத்தாய நம:
ஓம் ப்ரக்ருஷ்டார்த்த ப்ரதாய நம:
ஓம் அஷ்டைஸ்வர்ய
ப்ரதானாய நம:
ஓம் வரதாய நம:
ஓம் வரீயஸே நம: - 100
ஓம் பிரம்மனே நம:
ஓம் பிரம்ம ரூபாய நம:
ஓம் விஷ்னவே நம:
ஓம் விஸ்வரூபிணே நம:
ஓம் சங்கராய நம:
ஓம் ஆத்மனே நம:
ஓம் அந்தராத்மனே நம:
ஓம் பரமாத்மனே நம: - 108
ஓம் தத்தாத்ரேய நம:

கடுமையான துன்பங்கள் மீட்கும்

## ஸ்ரீதத்தாத்ரேய ஸ்தோத்திரம்

ஸ்ரீ பாத: ஸ்ரீ வல்லபத்வம் சதைவ
ஸ்ரீ தத்தா ஸ்மான்பாஹி தேவாதி தேவ
பாவக்ராஹ்யக்லேஸஹாரி ஸ்ஸுகீர்த்தே
கோரத்க்ஷ்டா துத்தராஸ்மான் நமஸ்தே -1

த்வம்னோ மாதாத்வம் பிதாத்போதிபஸ்த்வம்
த்ராதாயோக க்ஷேமக்ருத்ஸத்குருஸ்த்வம்
த்வம் ஸர்வஸ்வம் ந : ப்ரபோ விச்வமூர்தே
கோரத்க்ஷ்டா துத்தராஸ்மான் நமஸ்தே -2

பாபம் தாபம் வியாதிமாதிம்ச தைன்யம்
பீதிம் க்ளேஸம் த்வம் ஹராஸுத்வதைன்யம்
த்ரா தாரம்னோ வீக்ஷ ஈஸாஸ்த ஜுர்தே
கோரத்க்ஷ்டா துத்தராஸ்மான் நமஸ்தே -3

நான்யஸ்த்ராதா நாபி தாதா நபர்தா
த்வத்தோதேவத்வம் ஸரண்யோகஹர்தா
குர்வாத்ரேயானுக்ரஹ பூர்ணராதே
கோரத்க்ஷ்டா துத்தராஸ்மான் நமஸ்தே -4

தர்மே ப்ரீதிம் ஸன்மதிம் தேவ பக்திம்
ஸத்ஸங்காப்திம் தேஹிபுக்திம்ச முக்திம்
பாவாஸக்திம்ச அகிலாணந்த மூர்தே
கோரத்க்ஷ்டா துத்தராஸ்மான் நமஸ்தே -5

இது ஸ்ரீ வாஸதேவாநந்த சரஸ்வதி ஸ்வாமிகள் எழுதியது.



## தத்தாத்ரேய சாந்தி ஸ்தோத்திரம்

பூதப்ரேத பிசாசாத்யா: யஸ்ய ஸ்மரணமாத்ரத:
துராதேவ பலாயந்தே! தத்தாத்ரேயம் நமாமிதம் -1

யந்நாம ஸ்மரணா தைன்யம்! பாபம் தாபம்ச நஸ்யதி
பீதிர் க்ரஹஹார்த்தி துஸ்வப்னம்! தத்தாத்ரேயம் நமாமிதம் -2

தத்ருஸ்போடக குஷ்டாதி! மஹாமாரி விகாசிகா:
நஸ்யந்தி யன்யேபி ரோகாஸ்ச! தத்தாத்ரேயம் நமாமிதம் -3

ஸங்கஜா தேஸகலோத்தா! தாபத்ரய ஸமுத்திதா:
ஸாம்யந்தி யத்ஸ்மரணதோ! தத்தாத்ரேயம் நமாமிதம் -4

ஸர்ப விருஸ்சிக தம்ஷ்ட்ரானாம்! விஷார்தானாம் ஸரீரிணாம்
யந்நாம சாந்திதம் ஸீக்கிரம்! தத்தாத்ரேயம் நமாமிதம் -5

த்ரிவிதோத்பாத ஸமனம்! விவிதாரிஷ்ட நாஸனம்
யந்நாம க்ரூர பீதிக்ங்ம்! தத்தாத்ரேயம் நமாமிதம் -6

வைர்யாதி க்ருத மந்த்ராதி! ப்ரயோகாயஸ்ச கீர்தனாத்
நஸ்யந்தி தேஹ பாதாஸ்ச! தத்தாத்ரேயம் நமாமிதம் -7

யச்சிஷ்ய ஸ்மரணாத்ஸக்யோ! கத நஷ்டாதி லப்யதே
யாஈஸ ஸர்வதஸ்த்ராதா! தத்தாத்ரேயம் நமாமிதம் -8

ஜயலாபாயஸ: காம! தாதுர்த்த தத்தஸ்ய யஸ்தவம்
போகமோக்ஷ ப்ரதஸ்யேமம்! படேர்தத்த த்ப்ரியோ பவத்
தேவநாத குரோசுவாமின்! தேசிகர் ஸ்மாத்ம நாயகா
த்ராஹீ த்ராஹீ கிருபாஸிந்தோ! பாராயணம் பூர்ணதரம் குரு

இது ஸ்ரீ வாசு தேவாநந்த சரஸ்வதி சுவாமிகள் எழுதியது. இதை படித்தால் பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசுகள், பாவங்கள், பயம், கெட்ட கனவுகள், அம்மை, தொழுநோய் முதலிய பயங்கர வியாதிகள், பாம்பு, தேள் கடித்தல், வராதகடன், நஷ்டங்கள், பகை, பலவித துன்பங்கள், மந்திரங்கள் செய்வது முதலியவை நீங்கி, சாந்தி, சுகம், தனலாபம் கிடைத்து முக்தி அடையலாம்.

## ஸ்ரீ தத்தாத்ரேய கவசம்

ஸ்ரீ பாத: பாதுமே பாதௌ ஊரூ சித்தாஸனஸ்தித:
பாயாத்திகம்பரோகுஹ்யம் ந்ருஹரி: பாதுமேகடிம்: -1

நாபிம்பாது ஜகத்ர்ஸ்ட்டா உதரம் பாது தலோதர:
க்ருபாலு: பாது ஹ்ருதயம் ஷட்புஜ: பாதுமேபுஜௌ -2

ஸ்ரக்குண்டீ சூல டமரு சங்க சக்கர தர: கரான்
பாதுகன்டம் கம்பு கன்ட: ஸுமுக: பாதுமே முகம் -3

ஜிஹ்வாம்மே வேத வாக்பாது நேத்ரம்மே பாது திவ்யத்ருக்
நஸிகாம் பாது கந்தாத்மா பாது புண்ணிய ஸ்ரவா ஸ்ருதீ -4

லலாடம் பாது ஹம்ஸாத்மா சிர: பாது ஜடாதர:
கர்மேந்திரியாணி பாத்வீஸ: பாது ஞானேந்திரியாண்யஜ: -5

ஸர்வான்தரோன்த: கரணம், ப்ராண்மே பாது யோகிராட்
உபரிஷ்டாததஸ்தாச்ச ப்ருஷ்டத: பார்ஸ்வலோக்ரத : -6

அந்தர்பஹிஸ்சமாம் நித்யம் நாநாரூபதரோவது
வர்ஜிதம் கவசே நான்யாத் ஸ்தானம்மே திவ்ய தர்ஸன: -7

ராஜத: ஸத்ருதோ ஹிம்ஸாத் துஷ்ப்ரோகாதிதோ மத:
ஆதி வ்யாதி பயார்திப்யோ தத்தாத்ரேய ஸ்ஸதாவது -8

தனதான்ய க்ரஹக்ஷேத்ர ஸ்த்ரீ புத்ர பசுகின்கரான்
ஞாதீம் ஸ்ச பாதுமே நித்யம் அனசூயாநந்த வர்தன: -9

பாலோன்மத்த பிசாச போத்யுனிட் ஸந்திக பாதுமாம்:
பூத பௌதிக ம்ருத்யுப்யோ ஹரி: பாது திகம்பர: -10

யபிதத் தத்த கவசம் ஸன்னஹ்யாத் பக்தி பாவித:
ஸர்வானர்த்த வினிர்முக்தோ க்ரஹ பீடா விவர்ஜித: -11

பூத ப்ரேத பிஸாசாத்யை: தேவை ரப்பிய பராஜித:
புக்த்யாத்ர திவ்யான் போகான் ஸ: தேஹாந்தே தத்ப்தம்வ்ரஜேத்
இதை சிரத்தையுடன் படிப்பவர்களை தத்தாத்ரேயர் இரட்சிப்பார்.
இது ஸ்ரீ வாசு தேவநந்த சரஸ்வதி சுவாமிகள் எழுதியது.



*ஸ்ரீகுரு தத்தா ஜெய்குரு தத்தா*

## ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்தவம்

தத்தாத்ரேயம் மஹாத்மானம் வரதம் பக்தவத்சலம் |
ப்ரபந்நார்த்தி ஹரம் வந்தே ஸ்மர்த்ருகாமீ ஸநோவது || 1

தீன பந்தும் க்ருபாசிந்தும் சர்வ காரண காரணம் |
ஸர்வ ரக்ஷாகரம் வந்தே ஸ்மர்த்ருகாமீ ஸநோவது || 2

சரணாகத தீனார்த்த பரித்ராண பராயணம் |
நாராயணம் விபும் வந்தே ஸ்மர்தருகாமீ ஸநோவது || 3

ஸர்வானர்த்தஹரம் தேவம் ஸர்வ மங்கள மாங்களம் |
ஸர்வ க்லேசஹரம் வந்தே ஸ்மர்த்ருகாமீ ஸநோவது || 4

ப்ரம்மண்யம் தர்ம தத்வக்னம் பக்தி கீர்த்தி விவர்தனம் |
பக்தாபீஷ்ட ப்ரதம் வந்தே ஸ்மர்த்ருகாமீ ஸநோவது || 5

ஸோஸணம் பாப பம்கம் கஸ்ய தீபஸம்ஞானசேதஸ: |
தாபப்ரஸமானம் வந்தே ஸ்மர்த்ருகாமீ ஸநோவது || 6

ஸர்வரோக ப்ரஸமனம் ஸர்வபீடா நிவாரணம் |
ஆபதுத்தரணம் வந்தே ஸ்மர்தருகாமீ ஸநோவது || 7

ஜன்ம சம்சார பந்தக்னம் ஸ்வரூபானந்த தாயகம் |
நிஸ்ரேயச ப்ரதம் வந்தே ஸ்மர்த்ருகாமீ ஸநோவது || 8

ஜயலாப யஷ காம தாதுர் தத்தஸ்ய யஸ்தவம் |
போக மோக்ஷ பிரதஸ்யேமம் ப்ரபடேத் சுக்ருதீ பவேத் || 9

## குறிப்பிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றும் ஸ்லோகங்கள்

பக்தர்கள் குறிப்பிட்ட பயன்களுக்காக கீழே இ ருக்கும் ஸ்லோகங்களை 108 தடவை தினமும் ஜபித்தால் குருவின் அருளை பெற்று நினைத்த பயன்களை பெறலாம்.

சங்கடங்கள் தீர:

அனஸுயாத்ரி ஸம்பூதோ தத்தாத்ரேய திகம்பர:
ஸ்மர்த்ருகாமீ ஸ்வபக்தானாம் உத்தர்தாபவ ஸன்கடாத் ||

வறுமை நீங்க :

தரித்ரவிப்ரகேஹே ய:ஸாகம் புக்த்வோத்தம ஸ்ரியம்
ததௌ ஸ்ரீ தத்த தேவ: ஸ தாரித்ரியாத் ஸ்ரீ ப்ரதோவது ||

பிறந்த பிள்ளைகள் இறக்காமல் இருக்க;
பிள்ளைகள் மேன்மையடைய :

தூரீக்ருத பிஸாசார்திம் ஜீவயித்வா ம்ருதம் ஸுதம்
யோபூத பீஷ்டத: பாதுஸனி: ஸந்தானவ்ருத்திக்ருத் ||

கணவனின் வியாதி விலகல் -
அவர் ஆரோக்கியம் - சௌபாக்கியம் பெற:

ஜீவயாமாஸபர்தாரம் ம்ருதம் ஸத்யாஹி |
ம்ருத்யுஞ்ஜய ஸ்ஸயோகீந்த்ர: சௌபாக்ய மேப்ரயச்சது ||

கடன்கள் போக :

ஆத்ரேராத்ம ப்ரதானேன யோமுக்தோ பகவான் ருணாத்
தத்தாத்ரேயம் தமீஸானம் நமாமி ருணமுக்தயே ||
ஜபேச்லோ கமிமந்தேவ பித்ரர்ஷி: பும் ருணாபஹம்
ஸோன்ருணோ தத்தக்ருபயா பரம் ப்ரம்ஹாதிகச்சதி ||



வியாதிகள் போக:

பூமிம் ப்ரதக்ஷிணீக்ரத்ய ஸஸிஷ்யோ வீக்ஷ்ய மாதரம்
ஜஹாரத்விஜஸுலார்திம் ஸ்ரீதத்த சரணம் மம ||

படிப்பு நன்றாக வர :

வித்வத்ஸுத மவித்யம் ய ஆகதம் லோகநிந்திதம்
சின்ன ஜிஹ்வம் புதம் சக்ரே ஸ்ரீ தத்த சரணம் மம ||

மலடிக்கு பிள்ளைப்பேறு பெற :

அஸ்வத்த ஸேவமாதிஸ்ய புத்ராயோதாத்பல ப்ரத:
சித்ரக்ருத் வ்ருத்த வந்த்யாயை ஸ்ரீதத்த சரணம் மம ||

வாஸ்து தோஷங்கள் போக :

ராஜ ப்ரார்த்தித யேத்யாஸ்தாத் மடேயோ காணகாபுரே
ப்ரம்ம ரக்ஷஸமுத்தர்தா ஸ்ரீதத்த சரணம் மம ||

தத்தாத்ரேய ஸ்தோத்திரம்:

ஜடாதரம் பாண்டுரங்கம் சூலஹஸ்தம் கிரபாநிதிம்
ஸர்வ லோக ஹரம் தேவம் தத்தாத்ரேய மஹம் பஜே

புற்றுநோய் மற்றும் கடுமையான வியாதிகள் போக :

பூர்வதத்த வரயாதாத் ராஜ்யம் ஸ்போடக ருக்ஹர:
மிலேச்சாய திருஷ்டிம் சேஷ்டம் ஸ: ஸ்ரீ தத்தசரணம் மம:

## சித்த மங்கள ஸ்தோத்திரம்

ஸ்ரீ மதநந்த ஸ்ரீவிபூஷித அப்பல லட்சுமிநரசிம்மராஜா
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 1

ஸ்ரீவித்யாதரி ஸுரேகா ஸ்ரீராகீதர ஸ்ரீபாத
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 2

மாதா சுமதீ வாத்ஸல்யாமிருத பரிபோஷித ஜய ஸ்ரீபாத
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 3

சத்யருஷிஸ்வர துஹிதாநந்தன பாபநார்யனுத ஸ்ரீசரணா
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 4

சவித்ருகாட்டகசயன புண்யபல பரத்வாஜருஷி கோத்ரசம்பவா
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 5

தோ சௌபாதீ தேவ் லட்சுமிக்கன சன்க்கயாபோதித ஸ்ரீ சரணா
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 6

புண்யரூபிணீ ராஜமாம்ப சுத கர்ப்பபுண்ய பல ஸன்ஜாதா
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 7

சுமதீ நந்தன நரஹரிநந்தன தத்ததேவ பிரபு ஸ்ரீபாத
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 8

பீடிகாபுர நித்ய விஹாரா மதுமதி தத்தா மங்களரூபா
ஜய விஜயீ பவ திக்விஜயீபவ ஸ்ரீமதகண்ட ஸ்ரீவிஜயீபவ 9

இதைப் படிப்பதினால் மனதில் எண்ணிய கோரிக்கைகள் நிறைவேறும். முழு நம்பிக்கை, திட பக்தியுடன் தத்த ஆராதனை செய்யும் பக்தர்கள் இந்த ஸ்தோத்திரம் படித்தால் ஸ்ரீபாதஸ்ரீவல்லபரின் கிருபையை பெறுவார்கள். இந்த ஸ்தோத்திரம் படித்த இடத்தில் சூட்சும வாயு மண்டலத்தின் சித்தர்கள் மறைமுக ரூபத்தில் திரிந்துகொண்டிருப்பார்கள்' என்று சுசீலைக்கு கூறினார்.






ஜ

புெ
ஜ

சுப
ஜய

பீடி
ஜய

நிை
செய
ஸ்ரீப
ஸ்தே
சித்த
சுசீை



ஸ்ரீ நரசிம்ம சரசுவதி

# ஸ்ரீ குரு சரித்திரம்

## அத்தியாயம் 1

வினாயகரே உன்னை துதிக்கின்றேன். நீ பக்தர்களின் இடையூர்களை தீர்த்து வைப்பாய். தேவர்களும், முனிவர்களும், எல்லோரும் எந்த ஒரு வேலையும் துவங்கும் பொழுது அது தடையின்றி நடப்பதற்கு உன்னை முதலில் பூஜிப்பார்கள். அது போலவே நானும் இந்த நூலை எழுதுவதற்கு எந்த தடையும் வராமல் செய்ய வேண்டி உன்னை வணங்குகிறேன்.

அம்மா ஸரஸ்வதி உங்களுக்கு வணக்கம். ஒலிதான் உன் வடிவம். மனிதர்களுக்கு ஞானம் அளிப்பவள் நீதான். உன் அருளில்லாமல் மனிதன் ஒரு வார்த்தையைக் கூட உச்சரிக்க முடியாது. உன் அருளிருந்தால்தான் என்னால் இந்த நூலை எழுத முடியும். ஆகையால் எனக்கு அருள் புரிந்து நல்ல ஒலியை வரவழைத்து நன்கு இந்நூலினை எழுத ஆசியை வழங்குவாய்.

மும்மூர்த்திகளுக்கு வணக்கம். மும்மூர்த்திகளின் அவதாரமாக இவ்வுலகத்தில் அவதரித்த ஸ்ரீதத்தாத்ரேயாரின் மறு அவதாரங்களான ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சுவாமிக்கும், ஸ்ரீநரசிம்ம ஸரஸ்வதி அவர்களுக்கும் பக்தியுடன் பணிந்து வணங்கி இந்நூலினை எழுத முற்படுகிறேன்.

ஸ்ரீகுருவின் அருளை பெற்ற 'சாகரே' என்ற பெயருடன் பிரசித்தி பெற்ற சாயம் தேவன் என்ற சத்பிராமணர் எங்கள் முன்னோர். அவருடையது ஆபஸ்தம்ப பிரிவு கௌண்டில்ய கோத்திரம். அவர் மகன் தேவராவ், அவர் மகன் கங்காதரன் என்ற நான். என் தாய் சம்பா தேவி. பெரும் பதிவிரதை. இந்நூலினை எழுதுவதற்கு முன்பு என் தாய், தந்தையர்களின் பாதங்களை தொட்டு வணங்குகின்றேன்.

பக்த சிகாமணிகளே உங்களை வணங்குகிறேன்.

ஸ்ரீ தத்தாரேயரின் அருளினால் ஸ்ரீ குருவின் தூண்டுதலினால் இந்நூலை எழுத முற்பட்டேன். 'அம்ருத கும்பமான ஸ்ரீ குரு சரித்திரத்தை உன்னிடம் வழங்குகிறேன். இந்தக் கதையை நீ எழுது. இதனால் உனக்கும் உன் வம்சத்தினருக்கும் எல்லாவளமும் கிடைக்கும்' என்று ஸ்ரீகுரு கட்டளையிட்டார். வேண்டியவுடனே அருள் புரியும் ஸ்ரீநரசிம்ம சரசுவதி சுவாமியின் கட்டளை காமதேனு போல் இருந்து இந்த வேலையைப் பூர்த்தி செய்யும்.

மும்மூர்த்தியான ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரமான ஸ்ரீகுருவின் சரித்திரம் அபாரமானது. அதை முழுமையாகச் சொல்ல யாராலும் முடியாது. ஸ்ரீகுருவின் அருளினால் எழுதிய இந்த குரு கதையை படித்தவர்கள், கேட்டவர்களின் வம்சம் பவித்திரமாய் நோய் நொடிகள் இல்லாமல் எப்பொழுதும் எல்லா செல்வங்களுடன் வளமாய் வாழும். இதை சப்தாக பாராயணமாக (ஒரு வாரத்திற்குள்) பக்தியுடன் படித்து முடிப்பவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்.

கர்னாடக மாநிலத்தில் குல்பர்க்கா அருகில் கானகாபூர் என்று இப்பொழுது அழைக்கப்படும் கந்தர்வபுரத்தில் அருள் புரியும் ஸ்ரீ நரசிம்ம ஸரஸ்வதி சுவாமிகளின் புகழ் உலகமெல்லாம் பரவிற்று. அங்கு கல்யாணமாகாதவர்கள், குழந்தைப் பேறு இல்லாதவர்கள், ஏழைகள் வந்து சுவாமியை பூஜித்து அவர்களின் அவலங்களை தீர்த்துக் கொண்டு எல்லா நலன்களையும் பெற்றுச் செல்கிறார்கள். இந்த தகவலை நாமதாரகன் என்ற பக்தன் கேள்வியுற்று தன் துன்பங்களை தீர்க்க ஸ்ரீகுருவை தரிசிக்க வேண்டுமென்று நினைத்தான். தன் உடைமைகளை எல்லாம் விடுத்து கிராமத்தை விட்டு கானகாபூரை நோக்கி புறப்பட்டுச் செல்லும்போது அவன் இப்படி சிந்திக்கலானான்.

"தேவா நீங்கள் பக்தர்களை காப்பாற்றுவீர்கள். ஆனால் என்னை ஏன் காப்பாற்றவில்லை? என்னிடத்தில் தயவு இல்லையா? நீ எனக்கென்ன கைமாறு செய்தாய்? நான் உன்னை ஏன் காப்பாற்ற



வேண்டும் என்பீர்களா? கைமாறை எதிர்பார்த்தா நீங்கள் உங்கள் பக்தர்களை காப்பாற்றுகிறீர்கள்? நீங்கள் பக்தர்களின் புகலிடமல்லவா. எதைப் பெற்று துருவனை, ப்ரகலாதனை, விபீஷனனை காப்பாற்றினீர்கள்? அதே போல் என்னையும் காப்பாற்றுங்கள். நீ என் பக்தன் இல்லையே என்று நினைக்கிறீர்களா. ஆம் உண்மைதான். ஆனால் என் முன்னோரான சாயம்தேவன் உங்கள் பக்தனல்லவா. அவர் செய்த பக்திக்கு நீங்கள் எங்களுக்கு கடன்பட்டிருக்கிறீர்கள். ஆகையால் என்னை என் துன்பங்களிலிருந்து காப்பாற்றி அருள் புரிய வேண்டும். உங்கள் தரிசனம் தாருங்கள். இல்லையேல் நான் இறந்து விடுவேன்" என்று வேண்டிக் கொண்டு கவலையுடன் கானகாபுரம் செல்லும் போது மன வேதனையினால் சோர்வுற்று மயங்கி ஒரு மரத்தடியில் விழுந்தான். அப்பொழுது அவன் கனவில் சுவாமி தோன்றி அவனை தேற்றி தன் வலது கையை அவன் தலையில் வைத்து ஆசிர்வதித்தார். அப்பொழுது சுவாமி சித்தர் வேடத்தில் ஜடைகளுடன் விபூதி, புலித்தோல் தரித்திருந்தார். உடனே கனவிலேயே காலில் விழுந்து வணங்கினார். சுவாமி விபூதி இட்டு கனவிலிருந்து மறைந்தார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 2

கனவில் தோன்றிய அந்த ரூபத்தை மனதில் பதித்துக் கொண்டு சுவாமியை பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் கானகாபூரை நோக்கி சென்று கொண்டிருக்கையில் தன் கனவில் தோன்றிய அதே ரூபத்தில் ஒரு சாதுவை பார்த்தான். அவரை பார்த்தவுடனே அவன் கண்களில் ஆனந்தத்தால் நீர் வடிந்தது. அவரை வணங்கி 'சுவாமி உங்கள் தரிசனத்தால் நான் தன்யனானேன். நான் மிகவும் துன்புற்று மன வேதனையுடன் ஸ்ரீகுருவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் செல்கையில் உங்கள் தரிசனம் கிடைத்தது. என் மன வேதனை சற்று குறைந்தது. நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன? நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டான். அதற்கு அந்த சாது 'ஸ்ரீநரசிம்ம ஸரஸ்வதி சீடனான என் பெயர் சித்தரென்பார்கள். நான் தீர்த்த யாத்திரைகள் செய்து கொண்டு வருகிறேன். என் குரு பீம, அமரஜ நதிகளின் சங்கமத்தில் இருக்கும் கந்தர்வபுரத்தில் இருக்கிறார். அவர் மும்மூர்த்திகளின் அவதாரம். அவர் பக்தர்களிடத்தில் "இல்லையென்ற" பேச்சிற்கே இடமில்லை. அவரிடம் தஞ்சமடைந்தவர்களுக்கு எல்லா செல்வங்களையும் சுகங்களையும் கொடுப்பார். அவர்தான் சத்குரு' என்றார். இதைக் கேட்ட நாமதாரகன் 'அய்யா நானும் சுவாமியின் பக்தர்தான். என் முன்னோர்களும் அவர் பக்தர்கள்தான். இருப்பினும் நான் மிக நலிவடைந்திருக்கிறேன். அதிக துன்பங்களை அனுபவிக்கிறேன். இதற்கு காரணம் என்னவென்று கூறுங்களென்று' கேட்டான்.

சித்த முனி கருணையுடன் "நாமதாரகா பக்த வத்சலனான சத்குரு தன் கிருபையை எல்லா உயிர்களிடம் எப்பொழுதும் பொழிவார்! அவரைச் சேவித்தும் உன் துன்பங்கள் தீரவில்லையென்றால் உனக்கு அவரிடத்தில் முழுமையான பக்தி இல்லை. உன் மனதில் அவரை சந்தேகிக்கிறாய். முழுமையான, உண்மையான பக்தி யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கு குருவின்



கிருபை பூரணமாக கிடைக்கும். ஸ்ரீகுரு அவர்கள் பிரம்மா, விஷ்ணு, மகேசனின் அவதாரம். மும்மூர்த்திகள் ஒருவனை கோபித்தாலும் சத்குரு அவர்களை சுலபமாக காப்பாற்றுவார். ஆனால் சத்குருவின் கோபத்துக்கு ஆளானவனை யாராலும் காப்பாற்ற முடியாது" என்றார். அதற்கு நாமதாரகன் "சுவாமி 'குரு' என்பவர் மும்மூர்த்திகளின் சொரூபம் என்று கூறினீர்கள். மும்மூர்த்திகளின் கோபத்திற்கு ஆளானாலும் அவனை சத்குரு காப்பாற்றுவார் என்கிறீர்களே அதெப்படி என்பதை எனக்கு விவரமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அதற்கு சித்த முனி "நாமதாரகா நல்ல கேள்வி கேட்டாய். முதலில் ஒன்றாக இருந்த பரமாத்மாதான் பல பேர்களாக வேண்டுமென்று நினைத்து விஷ்ணு வயிற்றிலிருந்து கமலமும் அதன்மேல் நான்கு முகங்கள் கொண்ட பிரம்மாவும் பிறந்தனர். பிரம்மா மஹாவிஷ்ணுவின் சொல்படி முதலில் சனகசநன்தன், சநத்குமார, ஸநத்ஜாதகனையும் பிறகு ப்ரஜாபதிகளான மரீசி, அத்திரி, அங்கீரச, புலஹ, புலஸ்த்ய, க்ரது, வசிஸ்டர்களை உருவாக்கினார். பிறகு மூன்று உலகங்களை, தேவர்களை, பலவிதமான ஜீவராசிகளை, மனிதர்களை சிருஸ்டித்தார். காலத்தை நான்கு யுகங்களாக பிரித்து முதலில் சத்தியமே வடிவமாகப் பெற்ற, பூனூல், ஆபரனங்கள் அனிந்த க்ருதயுகத்தை அழைத்து பூலோகத்தில் 17 லட்சத்து 28 ஆயிரம் ஆண்டுகள் ஞான வைராக்கியங்களுடன் பிரகாசிக்க செய்து வரச் சொன்னார். அதன் காலம் முடிந்தவுடன் திடமான உடலுடன், கையில் யக்ஞ பொருட்கள் கொண்ட த்ரேதாயுகத்தை அழைத்து பூலோகத்தில் 12 லட்சத்து 96 ஆயிரம் ஆண்டுகள் தன் தர்மத்தை பூர்த்தி செய்துவரச் சொன்னார். ஆகையால் அந்த யுகத்தில் எல்லோரும் தர்ம சாத்திரங்களைக் கற்று யக்ஞ யாகங்களை செய்து வாழ்ந்தார்கள். அதன்பிறகு பிரம்மா 'வாள், கட்டிலின் கால், வில், அம்புகள்' இருக்கும் த்வாபர யுகத்தை அழைத்து பூலோகத்தில் 8 லட்சத்து 64 ஆயிரம் ஆண்டுகள் அவருடைய

தர்மத்தை நிறைவேற்றி வரச் சொன்னார். ஆகையால் த்வாபர யுகத்தில் அமைதி - உக்கிரமும், தயவு - கடினம் போன்ற எதிர்மாறான குணங்களுடன் மனிதன் வாழ்ந்தான். பிறகு பிரம்மா கலி புருஷனை அழைத்தார்.

இந்த கலி புருஷன் நீசமான பிசாசை போன்ற உருவமுடன், கலகம், துவேஷம் போன்ற குணங்களுடன் நன்நடத்தை பிடிக்காதவனுமாகவும், வலது கையில் நாக்கையும், இடது கையில் பிறப்பு உறுப்பை பிடித்துக் கொண்டு ஆனந்தமாக ஆடிக்கொண்டு வந்தான். பிசாசு ரூபத்தை பார்த்து சிரித்து "உன் வேடிக்கையான இந்த செயலுக்குக் காரணமென்ன?" என்று கேட்டார். அதைக் கேட்ட கலிபுருஷன் மனிதர்களை காமுகர்களாகவும், நாக்கை அடக்க முடியாதவர்களாகவும் செய்து அவர்கள் நற்கதி அடையாதபடி செய்வேன் என்பதை தெரிவிப்பதற்காகத்தான் இந்தச் செயல் என்றார். அப்பொழுது பிரம்மா நீ 4 லட்சத்து 32 ஆயிரம் ஆண்டுகள் பூலோகத்தில் உன் தர்மத்தை செய்து வா என்றார். அதற்கு கலி புருஷர் பயத்துடன் சுவாமி நான் தர்மத்தை அழிப்பவன். வெட்கமென்பது கிடையாது. தூக்கம், சோகம், கலகம் என்னுடன் இருப்பவர்கள். மற்றவர்களின் பணத்தைத் திருடுபவர்கள், பிற பெண்களை அனுபவிப்பவர்கள் என் சகோதரர்கள். டம்பம், கர்வம் என் உயிர் நண்பர்கள். போலி சன்னியாசிகள் எனக்கு வேண்டியவர்கள். வேதங்களை, சிவனையும் கேசவனையும் நிந்திப்பவர்களை எனக்குப் பிடிக்கும். தர்ம காரியங்களை செய்பவர்கள், உண்மை பேசுபவர்கள், புண்ணியவான்கள், பிரம்ம ஞானிகள், பக்தியுடன் ஜப, தியானங்கள் செய்பவர்கள் என்றால் எனக்கு நடுக்கம். இப்படிப்பட்டவர்கள் இருக்கும் பூலோகத்தில் நான் யார் யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று கூறுங்கள்" என்று வேண்டினான்.

அப்பொழுது பிரம்ம கலியிடம் "முன் யுகங்களில் மனிதர்கள் நீண்ட ஆயுள் பெற்றவர்கள். ஆகையால் அவர்கள் நீண்ட காலம் தவம் செய்து சித்தி அடைவார்கள். ஆனால் கலியுகத்தில் மனிதர்களின்



ஆயுளோ மிகக் குறைவு. ஆகையால் அவர்கள் தெய்வத்தின் நாம சங்கீர்த்தனத்தினால் முக்தி அடைவார்கள். ஆகையால் நீ என் சொல்படி பூலோகத்திற்குச் சென்று அங்கு தர்மத்தை கடைப்பிடிப்பவர்கள், ஞானிகள், புண்ணியம் செய்பவர்கள், சிவனை, பெருமாளை பூஜிப்பவர்கள், தாய், தந்தை, குருக்களைப் பூஜிப்பவர்களை பாதிக்காதே. இவர்கள் தவிர மற்றவர்கள் நீ அங்கு சென்றவுடன் உன் வசப்படுவார்கள். நல்லவர்கள் கூட உன் மகிமையினால் தீயவர்களாக மாறி விடுவார்கள்" என்று கூறினார்.

அதற்கு கலி "தேவதேவா முக்கியமாக குருவை பூஜிப்பவர்களை பாதிக்காதே என்று கூறுனீர்கள். அப்படி என்றால் குரு என்றால் யார்? அவரின் பெருமை என்ன" என்று வேண்டினான். அதற்கு பிரம்மா " 'கு' என்றால் இருள். 'ரு' என்றால் நீக்குபவர். ஆகையால் 'குரு' என்பவர் நம்மிடம் இருக்கும் இருள் என்ற அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பவர்".

" 'குரு' மும்மூர்த்திகளின் அவதாரம். ஆகையால் 'குரு' திருப்தி அடைந்தால் மும்மூர்த்திகள் சந்தோஷமடைவார்கள். குரு கோபித்தால் மும்மூர்த்திகளில் யாரும் காப்பாற்றமுடியாது. குருவின் கருணையினால் மனிதன் முக்தி அடைவான். குரு தன் சீடனுக்கு நல்லது, கெட்டதை தெரிவித்து நன்மார்க்கத்தில் செல்வதற்கு வழி காட்டுவார். குரு தன் போதனைகளால் பக்தி, ஞானம், யோகம், முக்தி ஆகியவை பெறச் செய்வார். அவர் ஞானஜோதி சொரூபம். அப்படிப்பட்ட குருவின் சேவையினால் மனிதனுக்கு எல்லா வளமும் கிடைத்து சத்கதி அடைவான். அதற்கு உதாரணமாக ஒரு கதையைக் கூறுகிறேன் கேள் என்றார்.

"முன்னொரு காலத்தில் கோதாவரி நதிக்கரையில் அங்கீரச மகரிஷி ஆசிரமம் இருந்தது. அங்கு நல்லோர்கள், தவம் செய்பவர்கள், விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் இருந்தார்கள். அவர்களில் 'பைலமுனி' மகன் 'வேததர்மன்' என்ற முனி இருந்தார். அவருக்கு அநேக சீடர்கள் இருந்தார்கள். வேததர்மன் தன் சீடர்களின்

குரு பக்தியின் சிரத்தையை தெரிந்து கொள்ள நினைத்து அவர்களை அழைத்து "என் முற்பிறவியில் செய்த பாவங்களினால் பெற்ற கர்மாவை இந்தப் பிறவியில் என் தவத்தினால் கொஞ்சம் போக்கினேன், மீதமுள்ள கர்மா போக்குவதற்கு மற்றுமொரு பிறவி எடுத்து தவம் செய்ய வேண்டும். இல்லை எனில் அதை நான் இப்பிறவியில் அனுபவிக்க வேண்டுமென்று எண்ணி அதற்காக எல்லா பாவங்களையும் போக்கும் காசிக்கு சென்று அங்கு இருபத்தொரு வருடம் 'தொழுநோய்' பெற்று குருடனாகவும், முடவனாகவும் வாழ்ந்து என் பாவங்களை போக்கிக் கொண்டு முக்தி அடைவேன். ஆகையால் அங்கு எனக்குத் துணையாக இருந்து சேவை செய்பவன் உங்களில் யார் இருக்கிறார்கள்" என்று கேட்டார்.

இதைக் கேட்ட சீடர்கள் குரு சேவையில் குறை நேர்ந்தால் என்ன நடக்குமோ என்று பயந்து மௌனமாய் இருந்தார்கள். ஆனால் தீபகன் என்ற சீடன் முன் வந்து சுவாமீ "நீங்கள் அனுமதி கொடுத்தால் உங்களுக்குப் பதிலாக நான் இருபத்தொரு வருடங்கள் குருடனாகவும், முடவனாகவும், தொழுநோய் பெற்று அந்த கர்மாவை அனுபவிப்பேன்" என்று வேண்டினான். இதைக் கேட்ட குரு "எவனொருவன் பாவம் செய்கிறானோ அவனே அந்த பாவ கர்மாவை அனுபவித்தாக வேண்டுமே தவிர, வேறொருவர் அனுபவித்தால் அந்த கர்மா தீராது. ஆகையால் நானே அதை அனுபவிக்க வேண்டும். நோயாளிகளுக்கு சேவை செய்வது மிகக் கடினமானது. அதற்கு சம்மதமானால் நீ என்னுடன் வரலாம் என்றார்." தீபகன் சம்மதித்து குருவுடன் காசிக்குச் சென்றான்.

அங்கு வேததர்மன் 'மணிகர்ணிகா' கட்டத்தில் நீராடி விசுவநாதரை வணங்கி அருகிலுள்ள கம்பலாஸ்வரத்தில் தீபகன் கட்டிய குடீரத்தில் வாழ ஆரம்பித்தார். உடனே அவருக்கு கண் பார்வை இழந்து, முடவனாகி தொழுநோய் உடலில் ஏற்பட்டது. உடலில் புண்கள் ஏற்பட்டு சீழ், புழுக்களுடன் துர்நாற்றம் வரத் தொடங்கிற்று. மேலும் அவர் மனநிலையும் இழந்தார். இந்நிலையில்



தீபகன் குருவுக்கு செய்யும் சேவை காசி விசுவநாதருக்கு செய்யும் சேவையைப்போல் பாவித்து தினமும் குருவுக்கு நீராட்டி, புண்களைத் துடைத்து, பூஜை செய்து, பிச்சை எடுத்து சோறூற்றி வந்தார். ஆனால் குருவோ தனக்கு சேவைகள் சரியாக செய்யவில்லை என்றும், புண்களை சரியாக துடைத்துவிடாததால் ஈக்கள் என்னைக் கடிக்கின்றன, அவற்றை விரட்டு என்று கோபிப்பார். அப்பொழுது தீபகன் உடலை சுத்தம் செய்ய முற்பட்டால் கோபித்து எனக்கு பசியாக இருக்கிறது, சீக்கிரமாக சாப்பாடு கொண்டுவா என்பார். அவன் நல்ல சாப்பாடு கொண்டுவந்தால் அது நன்றாக இல்லை என்று தூக்கி எறிவார். சில நேரங்களில் நீ நன்றாக சேவை செய்கிறாய் என்று பாராட்டுவார். உடனே கோபித்து நீ என்னை மிகவும் துன்புறுத்துகிறாய். நீ இங்கிருந்து செல் என்பார். ஆனால் தீபகனோ இவை யாவையும் பொருட்படுத்தாமல், பாவம் அதிகமாக உள்ளவர்களுக்கு துன்பங்களுடன் கொடூரமும் இருக்குமென்று நினைத்து குருவை பக்தியுடன் சேவிக்கலானான். குருவே சகல தேவதா ரூபமென்று நினைத்து காசி சேத்திர யாத்திரையும் செய்யாமல் அங்குள்ள தேவதைகளையும் சேவிக்காமல் குரு சேவையில் மூழ்கினான்.

ஒரு நாள் காசி விசுவநாதர் தீபகனின் குரு பக்திக்கு உவந்து தரிசனம் தந்து 'என்ன வரம் வேண்டுமோ கேள்' என்றார். அவன் குருவின் அனுமதி இல்லாமல் எந்த வரமும் கேட்க முடியாது என்று கூறி, தன் குருவிடம் சென்று இந்த விஷயத்தைக் கூறி உங்கள் வியாதி போகும்படி நான் வரம் கேட்கலாமா என்றான். அப்பொழுது அவர் "என்னடா எனக்கு சேவை செய்வது உனக்கு கடினமாக உள்ளதா. என் பாவ கர்மா நானே அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆகையால் நீ எந்த வரமும் கேட்க வேண்டாம்" என்று கோபித்துக் கொண்டார். தீபகன் விசுவேசுவரரைப் பார்த்து "அய்யா எனக்கு என் குருவே சகலமும். என் குருவுக்கு விருப்பமில்லாதது எனக்கு வேண்டாம். ஆகையால் நீங்கள்

செல்லலாம்'' என்றான். விஸ்வேசுவரர் இதைக் கேட்டு மிக்க ஆச்சர்யப்பட்டு வைகுண்டத்துக்கு சென்று விஷ்ணுவிடம் தீபகனின் குருபக்தி பற்றித் தெரிவித்தார். இதைக் கேட்ட விஷ்ணு தீபகனின் குரு பக்தியால் ஆனந்தமடைந்து அப்படிப்பட்ட சீடனை பார்க்கச் சென்று அவனிடம் ''பாலகா உன்னுடைய குரு பக்திக்கு நான் பெரும் சந்தோஷமடைந்தேன். உனக்கு என்ன வரங்கள் வேண்டுமானாலும் கேள். அவற்றை நான் தருகிறேன்'' என்றார். தீபகன் விஷ்ணுவை வணங்கி ''அய்யா வரங்களைப் பெற உங்களுக்காக தவம் செய்பவர்களை விட்டுவிட்டு, உங்களை என்றும் வணங்காத எனக்கு தரிசனம் தந்தீர்களே ஏன்?'' என்று கேட்டான். விஷ்ணுமூர்த்தி ''அப்பனே குருவை பக்தியுடன் சேவித்தால் என்னை சேவிப்பது போல் ஆகும். அப்படிப்பட்ட உத்தமனான சீடனுக்கு நான் வசமாகிறேன். தாய் தந்தையர்களை, வித்வான்களை, பிராமணர்களை, யதிகளை, யோகிகளை, தவம் புரிபவர்களை, பூசிப்பவர்களை, கணவனே கண்கண்ட தெய்வம் போல் நினைத்து அவர்களை சேவிக்கும் உத்தமிகள் எல்லோரும் என்னை சேவிப்பவர்கள் ஆவார்கள். ஆகையால் என்ன வரம் வேண்டுமோ கேள்'' என்றார். தீபகன் விஷ்ணுவை வணங்கி ''குருவே சகல தேவதா சொரூபமும், சகல தீர்த்த சொரூபம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. நீங்கள் கொடுக்கும் வரங்கள் குரு அவர்கள் கொடுக்கமுடியுமல்லவா'' என்றான். ஸ்ரீமன்நாராயணன் ''நாங்கள் இருவருமே ஒன்று. ஆகையால் எங்கள் சந்தோஷத்திற்காக வரம் கேள்'' என்றார். "சுவாமி அப்படி என்றால் என்றும் என் குரு பக்தி பெருகிக்கொண்டிருக்குமாறு அருள் புரியுங்கள்" என்று வேண்டினான். லெட்சுமிபதி சந்தோஷமடைந்து ''குரு சேவையால் நீ உயர்ந்துவிட்டாய். சகல தேவதைகள் உன் வசமாகிவிடுவார்கள். இந்தக் காசி விசுவநாதர் என்றும் கண் இமைபோல் உன்னைக் காப்பாற்றுவார். எவனொருவன் குருவே பரமார்த்தமென்றும், சகலமும் அவர் தானென்றும், மும்மூர்த்திகளின் அவதாரமென்றும் அறிந்து அவரை சேவிக்கிறானோ அவனுக்கு எல்லா வளமும் கிடைத்து சுகமாக வாழ்வான். என்றும் குருவை



சேவிப்பவர்களுக்கு மும்மூர்த்திகள் வசமாவார்கள். மும்மூர்த்திகளின் அருளினால் மனிதர்களுக்கு சத்குரு கிடைப்பார்.'' என்று கூறி மறைந்தார்.

தீபகன் தன் குருவான வேததர்மரிடம் சென்று அங்கு நடந்ததை எல்லாம் சொல்ல, குரு மிக்க மகிழ்ச்சியுடன் ''மகனே உன் குருபக்திக்கு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். நீ காசியில் சுகமாக வாழ். உனக்கு நவநிதிகள், எல்லா சித்திகளும் வசமாகும். எல்லா கல்விச் செல்வங்கள் உன்னிடம் வந்தடையும். உன் நாமத்தை சொல்வதினால் மனிதர்களின் சகல வியாதிகள், துன்பங்கள் நிவர்த்தியாகும். உன்னை பக்தியுடன் துதிப்பவர்களுக்கு எல்லா வளமும் கிடைக்கும் என்று ஆசீர்வதித்து பிரகாசமான உடலைப் பெற்றார்.

வேததர்மர், சீடன் எப்படி சேவை செய்ய வேண்டும், முக்தி வேண்டுகிறவர்கள் எப்படி தன் பாவகர்மாவை அனுபவிக்க வேண்டுமென்றும் தெரிவிப்பதற்காக இப்படி ஒரு ரூபம் எடுத்தார். ஆகையால் கலி புருஷனே நீ சத்குரு பக்தனிடம் செல்லாதே. மற்றும் அவனை துன்புறுத்தாதே. கலியுகம் ஆரம்பமாகிறது. நீ பூலோகத்திற்குச் சென்று உன் வேலையை ஆரம்பிப்பாய் என்று பிரம்மா கூறினார்.

நாமதாரகா எவனொருவன் மிக்க பக்தியுடன், சிரத்தையுடன் குருவை சேவிக்கிறானோ அவனுக்கு சகல தேவதைகள் வசமாகும். ஆகையால் குரு சேவையில் உன் வாழ்வை கழித்திடு'' என்று சித்தர் கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீ குருதேவதத்த!*



## அத்தியாயம் 3

“சித்த முனிவரே நீங்கள் கூறிய குரு பக்தி மகிமையைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். உங்களின் இருப்பிடம் எங்கே” என்று கேட்டான்.

“நாமதாரகா எனக்கு தனி இடம் கிடையாது. எப்பொழுதும் குருவுடனே இருப்பேன். குரு சரித்திரம் என்ற இந்த புத்தகத்தை எப்பொழுதுமே பாராயணம் செய்துக் கொண்டே இருப்பேன். ஏனென்றால் குரு சரித்திர பாராயணத்தினால் நல்வாழ்வும், முக்தியும் பெற வழி கிடைக்கும். பக்தியுடனும், சிரத்தையுடனும், நிஷ்டையுடனும் ஏழு நாட்கள் பாராயணம் செய்பவர்களின் பாவங்கள் தீர்ந்து பிள்ளைப்பேறு, செல்வம், தானியம், நீண்ட ஆயுள், ஞானம், கல்யாணம் ஆகியவைகளில் யார் யாருக்கு எது தேவையோ அது அவர்களுக்கு கிடைக்கும். நோயாளிகள் அவற்றிலிருந்து விடுபடுவார்கள். எல்லா வளமும் கொடுக்கும் சிந்தாமணிக்கு சமமானது” என்று கூறினான்.

நாமதாரகன் “குருதேவா என் முற்பிறவியின் புண்ணியத்தினால் உங்களை பார்க்க நேர்ந்தது. குருசரித்திரத்தின் மகிமையை கேட்கும் பொழுது மிக்க தாகமுடையவனுக்கு அமிர்தம் ஊட்டியதுப்போல் இருக்கிறது. இதை கேட்பதினால் என் அறியாமை போய்விடும். ஆகையால் இதை கேட்பதற்கு ஆவலுடன் இருக்கிறேன். என் சந்தேகங்களைத் தீர்க்கும் நீங்களே என் குரு. நீங்கள் எனக்கு குரு சரித்திரத்தை தெரிவிக்க வேண்டுகிறேன்” என்றான்.

இதைக் கேட்ட சித்த முனி மகிழ்ச்சியடைந்து நாமதாரகனின் கையை பிடித்து முன் ஸ்ரீகுரு பாவணம் செய்த அஸ்வத்த (அரச) மரமிடம் கொண்டு சென்று தன் அருகாமையில் அமரச் செய்து “அப்பனே அறியாமையினால் உனக்கு ஸ்ரீகுருவிடம் திடமான பக்தி ஏற்படவில்லை. குருவை முழுமையான நம்பிக்கையோடு பக்தியுடன்



சேவிப்பவர்களுக்கு அவரின் கருணை மழை பொழியும். அப்படி சேவிக்கும் பக்தனின் கூடவே இருந்து காப்பாற்றுவதே அவரின் தர்மம். அவர்களின் துயரங்கள் தீர்ந்து வேண்டியது நிறைவேறும். குருவின் கருணை எல்லோர் மேலும் சமமாகப் பொழியும். எப்படி மழை நீர் மேடுகளில் நிற்காமல் பள்ளங்களில் சேருமோ அதைப் போல் டம்பம் உள்ளவர்களிடம் நிற்காமல் அடங்கி பக்தியுடையவனிடம் சேரும். சிந்தாமணி நாம் வேண்டியதை தான் கொடுக்கும். ஆனால் குருவின் அருளோ நமக்கு என்னென்ன தேவையோ, எது நன்மைகளோ அவை எல்லாம் நாம் கேட்காமலேயே கொடுக்கும்” என்றார்.

நாமதாரகன் “தேவா ஸ்ரீகுருவின் மகிமையை கேட்டதினால் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். ஸ்ரீகுரு மூன்று குணங்கள் கொண்ட தெய்வம் என்று கூறினீர்களே? அவர் ஏன் மனித ரூபத்தில் அவதரிக்க வேண்டுமென்ற காரணம் கூறுங்கள்?” என்றான்.

சித்தமுனி மகிழ்ச்சியுடன் “ஸ்ரீகுருவிடம் உனக்கு இப்படியான பக்தி, சிரத்தை ஏற்பட்டது நல்லது. நீ கேட்டதற்கு பதில் கூறுகிறேன் கேள்.

உலகிற்கு மூலகாரணமான பகவான் அனேகமாக வேண்டுமென்று நினைத்து அவரின் சக்தி மூன்று குணங்களாகப் பிரிந்து, அவற்றில் ரஜோகுணம் பிரம்மாவாக அவதரித்து படைப்பு செய்பவராகவும், சத்துவ குணம் விஷ்ணுவாக அவதரித்து காப்பவராகவும், தமோ குணம் ஈசனாக அவதரித்து அழிப்பவராகவும் செயல்பட்டாலும் அவர்கள் வேறாக இல்லாமல் ஒன்றானவர்களே.

முன்னொரு காலத்தில் சூரிய வம்சத்தில் அம்பரீசர் என்ற முனிவர் வாழ்ந்தார். அவர் எப்பொழுதும் ஹரியை துதித்துக் கொண்டு, ஏகாதசி விரதம் செய்து வந்தார். ஒரு நாள் துவாதசி திதி ஒரு நாழிகை இருக்கும் நேரத்தில் துருவாச மகரிஷி தன் சீடர்களுடன் வந்தார். துருவாசரை பார்த்த உடனே பயத்துடன் வணங்கி துவாதசி திதி

இன்னும் சிறிது நேரம் இருக்கிறது. ஆகையால் நீங்கள் நதிக்கரைக்கு சென்று அனுட்டானத்தை முடித்துக் கொண்டு சீக்கிரமாக உணவு உட்கொள்ள வாருங்கள் என்று வேண்டினான். துருவாசர் நதிக்கரைக்கு சென்று, துவாதசி திதி முடியும் நேரம் ஆன பின்னும் வரவில்லை. துவாதசி திதி முடிவடைவதற்குள் விரதத்தை முடிக்க வேண்டும். இல்லை எனில் விரதத்தின் பயன் இல்லாமல் போய்விடும். ஆனால் அதிதியான மகரிஷி வராமல் விரதத்தை முடிப்பது நல்லதல்ல. என்னசெய்வது என்று புரியாமல் உணவை உண்ணாமல் வெறும் தண்ணீரை பருகினார். அந்த நேரத்தில் மகரிஷி வந்து நாங்கள் வராமல் நீ எப்படி விரதத்தை முடிப்பாய் என்று கோபித்து "நீ பலவிதமான யோனிகளில் பிறப்பாய்" என்று சாபமிட்டார். அம்பரீசர் பயந்து தன் தெய்வமான ஹரியை வேண்டி சரணடைந்தார். அப்பொழுது ஸ்ரீஹரி அங்கு தோன்றி துர்வாச மகரிஷியிடம் நீங்கள் கொடுத்த சாபம் என் பக்தனான அம்பரீசரால் அனுபவிக்க முடியாது. ஆனால் "நீங்கள் கொடுத்த சாபம் வீணாக முடியாது. அதை நான் அனுபவிக்குமாறு செய்யுங்கள்" என்றார். துர்வாசர் சிறிது கணம் யோசித்து இப்படியாவது பகவான் பல அவதாரங்கள் எடுத்து தீமையை ஒழித்து நல்லதை நிலைநாட்டுவார். ஆகையால் "அப்படியே ஆகட்டும்" என்று கூறி சென்றுவிட்டார். இந்த சாபம் காரணமாக நமக்கு தெரிந்தும் தெரியாமலும் ஸ்ரீவிஷ்ணு பல அவதாரங்கள் எடுத்தார். அதில் தத்தாத்ரேயர் ஒருவர்."

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 4

நாமதாரகன் சித்தயோகியிடம் 'ஸ்ரீஹரியின் அவதாரங்களில் முக்கியமான, என்றும் மறையாத அவதாரமான தத்தாத்ரேயர் பற்றி தெரிந்து கொள்ள மிக ஆவலாக இருக்கிறது அதை கூறுங்கள்' என்று வேண்டினான்.

முன்பு நான்கு யுகங்கள் முடிந்தபிறகு உலகமே நீரால் சூழ்ந்து கொண்டு இருக்கையில் அதில் ஸ்ரீஹரி உதித்தார். அவர் தொப்புளிலிருந்து பிரம்மா உதித்து நான்கு வேதங்களை நான்கு முகங்களாகப் பெற்று ஸ்ரீஹரியின் கட்டளைக்கிணங்க உலகின் பிராணிகளை படைக்க வேண்டி முதலில் தன் மனோபலத்துடன் மரீசி, அத்ரி, அங்கீரச, புலஸ்த்ய, புலஹ, க்ரது, வசிஸ்டர் ஆகிய ஏழு பேரை உண்டாக்கினார். பிறகு தன் இடது பக்கமிருந்து சதரூபம் என்ற பெண்ணையும் வலது பக்கமிருந்து சுவயம்பு என்ற மனிதனையும் உண்டாக்கினார். அவர்களுக்கு தேவஹுதி என்ற பெண் பிறந்தாள். இந்த தேவஹுதியை கர்தமர் என்ற ப்ரஜாபதிக்கு கொடுத்து கல்யாணம் செய்தார். அவர்களுக்கு ஒன்பது பெண் சிசுக்கள் பிறந்தார்கள். அவர்களில் ஒருவரான அனுசூயாவை அத்திரி மகரிஷி கல்யாணம் செய்து கொண்டார். இந்த அனுசூயா தேவி மிக்க பதிவிரதையாக வாழ்ந்தார். அவளின் பதிவிரத பிரபாவத்திற்கு கடினமான மலைகள், பூமியின் கற்கள் அவளின் கால்கள் கீழே மிக மென்மையாகின. சூரிய பகவான் மற்றும் அக்னியும் அவளிடம் தங்களின் வெப்பத்தை தனித்து குளிராக இருந்தார்கள். காற்றானது தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு மெள்ள வீசலாயிற்று. இதைப் பார்த்த தேவர்கள் அவளுடைய பதிவிரதா மகிமையினால் தங்களுக்கு ஏதேனும் கேடு விளையுமோ என்று பயந்து பிரம்மா, விஷ்ணு, ஈசனிடம் சென்று "அத்திரி மனைவியான அனுசூயா தேவியின் பதிவிரதா மகிமையை நீங்கள் ஏதேனும் செய்து பங்கம் செய்ய வேண்டும். ஏனென்றால் சூரியன், அக்னி, வாயு இவர்களெல்லாம் அவளின் மகிமைக்கு பயந்து

தங்களின் தன்மையை குறைத்துக் கொண்டு செல்கிறார்கள். அதேபோல் நாங்களும் அந்த அம்மையாருக்கு பணிவிடை செய்ய நேரிடுமோ என்று தயக்கமாக இருக்கிறது'' என்று வேண்டினார்கள். இதைக் கேட்ட மும்மூர்த்திகள் ''அவள் அவ்வளவு பெரிய பதிவிரதையா? நாங்கள் சென்று அவளின் பதிவிரத மகிமையைப் பங்கம் செய்ய முயற்சிப்போம்'' என்று கூறி முனிவர்களாக மாறுவேடத்தில் அத்திரி மகரிஷி அனுஷ்டானத்திற்கு நதிக்கரைக்குச் சென்ற சமயம் அங்கு விருந்தினர்களாகச் சென்று ''அம்மா நாங்கள் பசியுடன் உங்கள் ஆசிரமத்திற்கு வந்திருக்கிறோம். எங்களுக்கு அன்னமிடுங்கள்'' என்று கேட்டார்கள். விருந்தினர்களை தெய்வமாக நினைக்கும் அந்த அம்மையார் அவர்களை உள்ளே அழைத்து வணங்கி, பாத பூஜை செய்து, சந்தனம், பூக்களால் பூஜை செய்து தகுந்த ஆசனத்தில் அமரச் செய்து, ''அய்யா நீங்கள் அனுஷ்டானம் செய்து கொள்ளுங்கள். அதற்குள் நதிக்கரைக்குச் சென்ற மகரிஷி வந்து விடுவார். எல்லோருமாகச் சேர்ந்து உணவு உட்கொள்ளலாம்'' என்றாள். அவர்களோ ''மகரிஷி வரும் வரை காத்திருக்க முடியாது. எங்களுக்கு உடனே அன்னமிடுங்கள், இல்லை என்றால் நாங்கள் சென்று விடுவோம்'' என்றார்கள். வீட்டிற்கு வந்த விருந்தினர் சாப்பிடாமல் திரும்பி சென்றால் அது மிக பெரிய பாவமாகும். ஆகையால் மனதிலேயே தன் பதியை வணங்கி அவர்களிடம் ''அப்படி யே ஆகட்டும். உங்களுக்கு அன்னமிடுகிறேன்'' என்று கூறி அவர்களுக்கு இலைகளை போட்டு உள்ளே சென்றாள்.

அந்த நேரத்தில் அம்மூவரும் ''அம்மா எங்களுக்கு ஒரு நியமம் உள்ளது. தாங்கள் தங்களின் உடைகளை அவிழ்த்து நிர்வாணமாக எங்களுக்கு அன்னமிட்டால்தான் அதைச் சாப்பிடுவோம். இல்லை என்றால் நாங்கள் சாப்பிடாமல் சென்றுவிடுவோம்'' என்றார்கள். இதைக்கேட்ட அனுசூயா அவர்களை பார்த்து இப்படி கூறும் இவர்கள் சாமான்யமானவர்கள் அல்ல. தெய்வீக புருஷர்களாக உள்ளனர். இவர்களுக்கு அன்னமிடாமல் போகவிட்டால் இத்தனை நாள் நான்



அதிதிகளுக்கு தவறாமல் செய்யும் சேவை இன்றோடு வீணாகப் போய்விடும். பர புருஷர்கள் முன் நிர்வாணமாக சென்றால் என் பதிவிரதம் போய்விடும். ஆகையால் இவர்களை என் பிள்ளைகளாக நினைத்து அன்னமிடுவேன் என்று நினைத்து ''அப்படியே செய்கிறேன்'' என்று கூறி உள்ளே சென்று மனதிலேயே அத்திரி பாதங்களுக்கு வணங்கி, அந்த மூவர் தன் பிள்ளைகள் என்று நினைக்கையில் அவளின் பதிவிரதா மகிமையினால் அம்மூவரும் பிறந்த குழந்தைகளாக மாறினார்கள். நிர்வாணமாக அவள் அந்த குழந்தைகளிடம் வந்ததும் அவளுக்கு தன் மார்பங்களிலிருந்து பால் சுரப்பின. அவர்களை ஒவ்வொருவராக தன் மடியில் தூக்கி தாய்பால் தந்தாள்.

அனுசூயாவின் பாக்கியம் என்னவென்று கூற முடியும். உலகை உண்டாக்கும் பிரம்மா, உலகை ஆளும் விஷ்ணு, உலகை அழிக்கும் ஈசன் ஆகிய மும்மூர்த்திகளுக்கு பால் கொடுக்கும் பாக்கியம் கிடைத்ததே. மும்மூர்த்திகளும் தங்கள் வேலையை செய்து அலுத்துப் போனவர்கள்போல் ஆனந்தமாகப் பாலைப் பருகினார்கள்.

தன் அகக்கண்ணில் பார்த்து அவர்கள் மூவரும் மும்மூர்த்திகள் என்று தெரிந்து கொண்டு அவர்களை தொட்டிலில் (ஊஞ்சல்) இட்டு நடந்ததையே தாலாட்டாகப் பாடினாள். இதற்குள் தன் அனுஷ்டானம், தவம் முடித்து அத்திரி முனிவர் ஆசிரமத்திற்கு வந்து அங்கு ஊஞ்சலில் இருக்கும் குழந்தைகளை பார்த்து ''நடந்தது என்ன'' என்று கேட்டார். அங்கு நடந்ததை எல்லாம் முனிவரிடம் கூறினாள் அனுசூயா. அத்திரி முனிவர் தன் யோக திருஷ்டியினால் அவர்கள் மும்மூர்த்திகள் என்று தெரிந்து கொண்டு அவர்களை வணங்கி இவ்வாறு துதிக்கலானார். ''ஹே பிரம்மா! நீங்கள் உலகில் பிராணிகளை உண்டாக்கி அலுத்துபோய் தூங்கவேண்டுமென்று நினைத்து இங்கு வந்து தூங்குகிறீர்களா. ஓ பரம்பொருளான மகாவிஷ்ணு பிரபுவே உலகை ஆளும் நீங்கள் எங்கள் ஆசிரமத்தில் வந்து ஊஞ்சலில் அமர்ந்து எங்களை மகிழ்விக்க நினைத்தீர்களா? ஒரே சக்தியாக உதித்து

மும்மூர்த்திகளாக மாறி உலகின் பிராணிகளை தங்களில் லயித்துக் கொள்ளும் ஈசனே, நீங்களும் இங்கு வந்து எங்களின் அதிதி சத்காரத்தை பெற்று எங்களை மகிழ்விக்க வந்தது நாங்கள் செய்த பாக்கியமல்லவா. உங்களுக்காக தவம் செய்யும் எல்லோரையும் விட்டுவிட்டு எதுவும் கேட்காமல் இருக்கும் எங்களுக்கு தங்களின் தரிசன பாக்கியம் கிடைக்கப்பெற்றதற்கு என்ன புண்ணியம் செய்தோம் ''என்றார்.

இதைக்கேட்ட மும்மூர்த்திகள் பாலகர்கள் ரூபங்களை விட்டு நிஜரூபங்களுடன் அவர்கள் முன் தோன்றி ''உங்கள் மனைவி மகா சாத்வி அனுசூயா மாதாவின் பதிவிரதா மகிமையை சோதிக்க வேண்டுமென்று வந்து அவளின் பதிவிரதா மகிமையினால் நாங்கள் பாலகர்களாக மாறி அவளின் அமுதமான பாலைப் பருகி ஆனந்தமடைந்தோம். ஆகையால் உங்களுக்கு என்ன வரம் வேண்டுமோ கேளுங்கள் தருகிறோம்'' என்றார்கள். உடனே அந்த அம்மையார் ''நீங்கள் என் குழந்தைகளாக மாறி என் பாலை அருந்தினீர்கள். அது அப்படியே உண்மை ஆக வரம் கொடுங்கள்'' என்று வேண்டினாள். அப்பொழுது மும்மூர்த்திகள் ஆஹா இந்த அம்மையார் உலகின் நலம் வேண்டி அற்புதமான வரம் கேட்டாள் என்று நினைத்து, தாயே அப்படியே ஆகட்டுமென்று கூறி பிரம்மா தன் அம்சமான சந்திரன் என்ற குழந்தையும், மகாவிஷ்ணு தத்தர் என்ற குழந்தையும், பரமசிவன் துருவாசர் என்ற குழந்தையும் கொடுத்து நாங்கள் இவர்களை உங்களுக்கு தத்தமாக்கிறோம் என்று கூறி ஆசிர்வதித்துச் சென்றார்கள். சில நாட்களுக்குப் பிறகு பிரம்மாவின் அம்சமான சந்திரனும், பரமசிவனின் அம்சமான துர்வாசரும் தங்களின் அம்சங்களை தத்தாத்ரேயரிடம் லயம் செய்து சென்றுவிட்டார்கள். அன்று முதல் தத்தாத்ரேயர் மும்மூர்த்திகளின் அம்சங்களைப் பெற்று அவர்களின் ரூபங்களுடன் குருவின் பாரம்பரியத்தை ஆரம்பித்தார். ஸ்ரீமகாவிஷ்ணு எடுத்த அவதாரங்களான மத்சய, வராக, ராம, கிருஷ்ண முதலானவை



தாங்கள் அவதாரமெடுப்பதற்கு காரணமான பணியை முடித்தவுடன் தங்களின் சரீரங்களை துறந்துவிட்டு வைகுண்டத்திற்கு சென்றார்கள். ஆனால் தத்தாத்ரேயர் அப்படி அல்லாமல் இவ்வுலகம் இருக்கும் வரையில் பூமியில் இருந்து கொண்டு தன்னை நாடிவரும் தன் பக்தர்களை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் இன்னும் பல ரூபங்களாக இவ்வுலகில் தோன்றிக் கொண்டிருக்கிறார். பிற யுகங்களில் யாகம், தவம் முதலியவை செய்து பெறக்கூடிய புண்ணியமும், மோட்சமும், கலியுகத்தில் ஸ்ரீகுருவை வணங்கி ஆராதனை செய்தாலயே நமக்கு கிடைக்கப் பெற்றது சந்தோஷமானது.

நாமதாரகன் தத்தாத்ரேயரின் அவதாரம் பற்றி கேட்டு ''அந்த அம்மையார் அனுசூயாவின் கருணையினால் மானிடர்களுக்கு குரு பரம்பரையும் என்னைப்போல் அறியாதவர்களுக்கு உங்களைப் போன்ற குருவும் கிடைத்தது மிக்க சந்தோஷமானது. மேலும் குருவின் மறு அவதாரங்களையும் அவர்களின் மகிமைகளையும் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளேன் தயவு செய்து கூறுங்கள்'' என்று வேண்டினான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 5

சித்தமுனி "நாமதாரகா தர்மத்தையும், நல்லோர்களையும் காப்பாற்ற, தீமையையும், தீயவர்களையும் ஒழிக்க பகவான் இந்த கலியுகத்தில் மானிட ரூபத்தில் அவதரித்தார். அப்படி அவர் செய்த அவதாரம் பற்றி கூறுகிறேன்.

பவித்திரமான கோதாவரி சமீபத்தில் "பிடாபுரம்" என்ற ஊர் இருக்கிறது. அங்கு ஆபஸ்தம்ப பிரிவை சேர்ந்த பிராமணர்களான அப்பலராஜா, சுமதி என்ற தம்பதிகள் இருந்தார்கள். அவர்கள் தத்தாத்ரேயரின் பக்தர்கள். அந்த அம்மையார் மிக உன்னதமான பதிவிரதை. அவர்களுக்கு நிறைய பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் எல்லோரும் இறந்து இரண்டு பேர் மட்டும் உயிருடன் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் குருடன், மற்றொருவர் முடவன்.

ஆனாலும் அவர்கள் கவலைப்படாமல் தினமும் தங்கள் வீட்டிற்கு வரும் யாசகர்களை தத்த ரூபமாக நினைத்து பிச்சை அளிப்பார்கள். ஒரு அமாவாசையன்று அவர்கள் பெரியோர்களுக்கு சிரார்தம் செய்ய பிராமணர்களை அழைத்து வேண்டிய கர்மாக்களை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது தத்தாத்ரேயர் ஓர் பிராமணர் வேடத்தில் அவர்கள் வீட்டுக்கு வந்து பிச்சை கேட்டார். சாதாரணமாக பெரியோர்களுக்கு சிரார்த்தம் செய்யும் பொழுது வந்திருக்கும் அதிதிகள் உண்ட பிறகுதான் மற்றவர்கள் சாப்பிட வேண்டுமென்ற நியதி. ஆனால் சுமதியோ வந்தவர் ஒரு மகாஞானி என்றும் தத்தாத்ரேயரே வந்திருக்கிறார் என்றும் எண்ணி தன் கணவனுக்கும் சொல்லாமல் அவருக்கு பிச்சையை இட்டார். உலக நியதியையும் மீறி தனக்கு பிச்சையை இட்டதற்கு சந்தோஷமடைந்து தன் உண்மையான ரூபத்தில் தோன்றினார்.

நாமதாரகா அந்த சுவாமியின் ரூபத்தை என்னவென்று வர்ணிப்பேன். அவரின் அழகை காண ஆயிரம் கண்கள் போதாது.



அவரை வர்ணிக்க ஆயிரம் நாக்குகள் போதாது. அவர் வெள்ளி மலை போல் வெண்ணிற பிரகாசத்துடனும், ஆறு கரங்களில் சங்கு, சக்கரமும், டமருகம், சூலம், ஜப மாலை, கமண்டலமும் கொண்டு மூன்று முகங்களுடனும் வெண்ணிறம் கொண்டும் சுத்த சத்வமாக ஒளித்துக் கொண்டு திகழ்ந்தார். அந்த ரூபத்தை பார்க்க தன் உடலெல்லாம் கண்களாக்கி ஆச்சரியத்துடனும், ஆனந்த பரவசத்துடனும் பார்க்கலானாள்.

அப்பொழுது சுவாமி "அம்மா உன் பக்திக்கும், என் மீது வைத்திருக்கும் உன் நம்பிக்கைக்கும் நான் பரவசமடைந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ தருகிறேன் கேள்" என்றார். சுவாமியின் அழகான ரூபத்தைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கிய சுமதி அவரின் இனிய சொல்லை கேட்டதும் இன்னும் பக்தி பரவசத்தில் மூழ்கினாள். சிறிது நேரத்திற்கு தன்னை தேற்றிக்கொண்டு சுவாமியை இப்படி துதிக்கலானாள். "பரம் பொருளே நீங்கள் உலகை உண்டாக்கியவர். பக்தவத்சலர், தயா ஸ்வரூபி, நீங்கள் முன்னமே உங்கள் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை கொடுத்தீர்கள். எனக்கு நிறைய பிள்ளைகள் பிறந்தும் அவர்கள் இறந்துவிட்டார்கள். பிறகு இரண்டு பேர் பிறந்தார்கள். அவர்களில் ஒருவன் குருடன், மற்றொருவன் முடவன். நீங்கள் என்னை 'அம்மா' என்று அழைத்தீர்கள். ஆகையால் நீங்கள் எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும்" என்று கேட்டாள். பக்தி சிரத்தையுடன் தெளிவுற்ற அந்த அம்மையாரின் கோரிக்கைக்கு ஆச்சரியப்பட்டு கலியுகத்தில் நன்மார்க்கத்தை புகட்ட, நல்லோர்களைக் காப்பாற்ற. தீயவை ஒழிக்க குருமார்கத்தை மேன்மையூட்ட நான் பிறக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று தன் மனதிலே நினைத்து அம்மா எனக்கு சமமான மகன் உனக்குப் பிறப்பான். ஆனால் அவன் பேச்சைதான் நீங்கள் கேட்க வேண்டுமே தவிர அவனை எந்த விதத்திலும் நீங்கள் நிர்பந்திக்கக்கூடாது. அவனால் இந்த உலகிற்கு நன்மைகள் நடக்க வேண்டும்" என்று கூறி ஆசிர்வதித்து அங்கிருந்து மறைந்தார்.

சுவாமி மறைந்ததும் சுமதி உள்ளே சென்று கணவரிடம் நடந்ததை எல்லாம் கூறி, ''வந்தவர் தத்தாத்ரேயர் என்று நினைத்து சிரார்த்த கர்மா பூர்த்தி செய்யாமல் வந்த அதிதிகள் உண்ணாமலேயே அவருக்கு பிச்சை அளித்தேன் என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள். அதற்கு அப்பலராஜா "உன் சிரத்தையான பக்திக்கு உவந்து அந்த தத்தாத்ரேயரே உனக்கு தரிசனம் கொடுத்தார். அதுவுமில்லாமல் நாம் சிரார்த்த கர்மா செய்து, பிராமணர்களுக்கு அன்னமிட்டு அந்த யக்ஞ பயன் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு தான் கொடுப்போம். அப்படியான அந்த விஷ்ணுவே நேராக வந்து உன்னிடம் பிச்சை பெற்றார் என்றால் அது நாம் செய்த மகாபாக்கியம். நீ செய்த இந்த செயலினால் நாமும் நம் வம்சத்தினர் எல்லோரும் புண்ணியம் பெற்றோம். அதுவுமில்லாமல் ஸ்ரீதத்தாத்ரேயர் மத்தியான சமயத்தில் தன் பக்தர்களை உத்தரிக்க எந்த ரூபத்திலும் பிச்சைக்கு வருவார். ஆகையால் தத்த சேத்திரங்களான மஹூரூ, கரவீரம், பாஞ்சாலேச்வரம் ஆகிய இடங்களில் மத்தியான நேரத்தில் வரும், யாசகர்களுக்கு இன்னும் பிச்சையிடுகிறார்கள். ஆகையால் எல்லோருமே மத்தியான நேரத்தில் வரும் யாசகர்களை தத்த ரூபமாக நினைத்து தவறாமல் அவரவர் சக்திகேற்ப பிச்சையிட வேண்டும். ஆகையால் நீ செய்த இந்தக் காரியத்தில் தவறேதுமில்லை" என்றார்.

கூடிய சீக்கிரத்தில் அந்த அம்மையார் சுமதீ தேவி கர்ப்பம் தரித்தாள். பாத்ரபத மாதம் சுக்ல சதுர்த்தி (ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி) அன்று சுபமுகூர்த்தத்தில் ஆண் பிள்ளை பிறந்தான். அவனின் பிறந்த நேரத்தின் ஜாதகத்தைக் கணித்த சான்றோர்கள் இவன் தெய்வத்தின் அவதாரமாவார். இவர் ஜகத்குருவாகி சாதுக்களுக்கு தீக்ஷை கொடுத்து உலகை நன்மார்க்கத்தில் நடத்துவார் என்று கூறினார்கள். இதைக் கேட்ட அந்தத் தாய் தந்தையர்கள் தத்தாத்ரேயர் தமக்கு அளித்த வரத்தை நிறைவேற்றவே இப்படி பிறந்தாரென்று ஆனந்தப்பட்டார்கள். அவன் பாதங்கள் சங்கு, சக்ர ரேகைகளுடன் மிக்க பிரகாசமாக, தேஜோமயமாக இருந்ததினால்



''ஸ்ரீபாதன்'' என்ற பெயர் வைத்தார்கள். அவன் வளர்பிறை சந்திரனைப் போல் தினமும் வளர்ந்து கொண்டு எட்டு வயது பெற்றான். ஒரு சுபமுகூர்த்தத்தில் அவனுக்கு உபநயனம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீபாதர் உடனே வேதங்களையெல்லாம் அங்குள்ளவர்களுக்கு போதித்தார். இதைக்கேட்ட அங்குள்ளவர்கள் எல்லாரும் இப்படி குருவிடம் எதுவுமே கற்காமல் வேதங்களைக் கூறுவது அந்த பகவானான தத்தாத்ரேயராலயே முடியுமே தவிர சாமான்யமான நம்மைப்போல் உள்ளவர்களுக்கு முடியாது. ஆகவே இவர் மும்மூர்த்திகளின் மறு அவதாரமே என்று எண்ணி பாலகன் என்று பார்க்காமல் அவரின் பாதங்களை தொட்டு வணங்கினார்கள். இப்படி அவன் பதினாறு வயதடைந்தான். அப்பொழுது தந்தை அப்பலராஜு ஸ்ரீபாதருக்கு திருமணம் செய்ய நினைத்து பெண்ணை பார்க்கலானார். இதைத் தெரிந்து கொண்ட ஸ்ரீபாதர் தன் தந்தையிடம் ''அய்யா எனக்கு கல்யாணத்திற்காக பெண்ணை தேட வேண்டாம். எல்லா சுபலட்சணங்களுடன் எனக்கு பொருத்தமான பெண் ஏற்கனவே தயாராக உள்ளாள். அவள்தான் ''யோகஸ்ரீ.'' அவளை கைபற்றி நான் சன்னியாசியாவேன். நான், ''ஸ்ரீவல்லபன்'' என்றதினாலேயே எனக்கு பிள்ளைகள் இல்லை என்றாலும் முக்தி பெறுவேன். அதுவுமில்லாமல் உலகிற்கு ஞானத்தை தந்து நன்மார்க்கத்தில் செல்வேன்'' என்றார்.

இதைக் கேட்ட தாய் தந்தையர்கள் அன்று எமக்கு இந்தப் பிள்ளை வரம் அளிக்கும் பொழுது தத்தாத்ரேயர் கூறியதை நினைவு கூர்ந்து இம்மகானின் கூற்றுக்கு மறுப்பு தெரிவிப்பது தவறாகும். இவர் உலகை ஆள வந்த அந்த மும்மூர்த்திகளின் அவதாரம். இவரால் குரு பரம்பரை பிரசித்தமாக வேண்டும். ஆகையால் இவருக்கு நமது துன்பங்களை தெரிவித்து அவற்றை தீர்த்து வைக்க வேண்டுமென்று வேண்டுவோம் என நினைத்து கண்ணீர்மல்க ஸ்ரீபாதரிடம் ''அப்பனே உன்னை பார்த்த பின்பு எங்களின் துன்பங்களை எல்லாம் மறந்து நீ எங்களை வாழ்வு முடியும் வரை காப்பாற்றுவாய் என

நினைத்தோம். நாங்கள் வயோதிகர்கள் ஆகிவிட்டோம். உன் சகோதரர்கள் குருடனும், முடவனுமாவார். அவர்களை யார் காப்பாற்றுவார்கள். நீங்கள் எங்களை விட்டு செல்கிறீர்கள், எங்கள் கதி என்ன?'' என்று கேட்டார்கள். அதைக் கேட்ட ஸ்ரீ பாதர் தாய் தந்தையர்களின் கண்ணீரை துடைத்து தன் சகோதர்களிடம் சென்று தன் அம்ரித பார்வையால் அவர்களை ஒருவர் பின் ஒருவராக பார்த்தார். அந்த அம்ரித பார்வை பட்டவுடனே அவர்களின் உடலின் குறைகள் நீங்கி நல்ல தேகங்களை பெற்றார்கள். மற்றும் அவர்கள் வேதங்களும் சகல சாஸ்திரங்களும் பெற்றுவிட்டார்கள். அவர்களைப் பார்த்து ''நீங்கள் எல்லா வளமும் பெற்று, பிள்ளை பேரன்களுடன் வாழ்வீர்கள். உங்களிடம் லட்சுமி நிலையாய் இருப்பாள்'' என்று ஆசீர்வாதம் செய்தார். இந்த அற்புத காட்சியை பார்த்த தாய் தந்தைக்கு ஸ்ரீபாதர் தங்களின் தமையன் என்ற மமதை நீங்கி, உலகமெங்கும் இருக்கும் அவரை தம் மகனென்று நினைத்தது தவறு என்று எண்ணி, அவரிடம் ''பிரபு இந்த கலி மாயையாலும், உங்களுக்கு பாலூட்டிய மமதையாலும் நீங்கள் உலகை ஆளும் பரம்பொருள் என்பதை மறந்து எங்கள் பிள்ளையாக நினைத்தோம். எங்கள் அஞ்ஞானத்தை மன்னித்து விட்டு உங்களின் யதார்த்த ரூபத்தை காண்பித்து எங்களின் மமதையை அகற்றிவிடுங்கள்'' என்று வேண்டினார்கள். அப்பொழுது தத்தாத்ரேயர் தன் உண்மையான ரூபத்தை அவர்களுக்கு காண்பித்தார். கோடி சூரிய ஒளியுடனும், கோடி சந்திர குளுமையுடனும், வெள்ளி மலைபோல் பிரகாசமான அந்த ரூபத்தைக் கண்டவர்களுக்கெல்லாம் தன் தேகங்களின் ஒவ்வொரு அணுவும் அமிர்தத்தைப் பருகியது போல் புலகாங்கிதம் அடைந்தார்கள். அப்பொழுது ஸ்ரீபாதர் அம்மாவிடம், ''என் இந்த ரூபத்தை நீ எப்பொழுதும் தியானித்துக் கொண்டேயிருந்தால் உங்களிடம் இருக்கும் அஞ்ஞானம் அகன்று எல்லா வளமும் பெற்று நூறு ஆண்டுகள் வாழ்ந்து என்னிடம் ஐக்கியமாவீர்கள்'' என்று கூறி, தன் சகோதரர்களிடம் நீங்கள் தாய் தந்தையர்களை சேவித்து சுகமாக



வாழுங்கள் என்று கூறி, தாய் தந்தையர்களை மூன்று முறை வலம் வந்து நான் சந்நியாசி ஆக அனுமதி கொடுங்கள் என்று வேண்டினார். அவர்களும் அப்படியே ஆகட்டுமென்று கூறுகையில், அவர் சந்நியாசம் பெற்று அங்கிருந்து புறப்பட்டு துவாரகை, காசி, பிருந்தாவனம், பத்ரி முதலிய சேத்திரங்களை தரிசித்துவிட்டு பிறகு கோகர்ண சேத்திரத்தை வந்தடைந்தார்.'' என்று சித்த முனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 6

நாமதாரகன், "அய்யா துவாரகை, காசி, கேதாரம், பத்ரி ஆகிய சேத்திரங்கள் புகழ்பெற்றவை. ஆகையால் ஸ்ரீபாதர் அங்கு சென்றார். ஆனால் அவர் கோகர்ணத்துக்கு சென்றார் என்று சொன்னீர்களே, அந்த இடத்தின் முக்கியத்துவம் என்னவென்று கூறுங்கள்" என்று சித்தமுனியை வேண்டினான்.

அதற்கு சித்தமுனி "முன்பு இராவணனின் சிவபக்தையான தாய் கைகஸி சிவலோகம் பெற நினைத்து தினமும் ஒரு புது பொன் சிவலிங்கத்தை பூஜை செய்து கொண்டிருந்தாள். ஒரு நாள் அவளுக்கு புது சிவலிங்கம் கிடைக்க பெறாததால் மண்ணால் ஒரு சிவலிங்கத்தைச் செய்து பூஜை செய்து கொண்டிருந்தாள். அந்த நேரம் பார்த்து அங்கு வந்த இராவணன் ஏன் மண்ணால் செய்த சிவலிங்கத்தை பூஜை செய்கிறாய் என்று கேட்டார். தினமும் ஒரு புது பொன் சிவலிங்கத்தை பூஜை செய்து வந்தால் சிவலோகம் பெறலாம். ஆனால் இன்று புது பொன் சிவலிங்கம் கிடைக்காதலால் மண்ணால் ஆன இந்த லிங்கத்தை பூஜிக்கிறேன்" என்று கூறினாள். அதற்கு இராவணன் ஏன் சிவலிங்கத்தை பூஜிக்க வேண்டும். நான் என் பலத்தால் சிவனும், பார்வதியும் இருக்கும் அந்த சிவலோகத்தையே இங்கு கொண்டு வருகிறேன். இனிமேல் அந்த ஈசனையே பூஜிக்கலாம் என்று கூறி கைலாயத்திற்குச் சென்று தன் பத்து சிரங்களாலும், இருபது கரங்களாலும் கைலாய மலையை தூக்க முற்பட்டான். அதனால் மூன்று உலகங்களும் ஆட்டமிடத் தொடங்கின. இதைப் பார்த்த பார்வதி தேவி ஈசனிடம் என்ன இந்த விபரீதமென்று கேட்டாள். இது இராவணனின் செயல் என்று கூறி, கைலாய மலையை கீழே அமுத்தினார். அந்த மலையின் கீழ் இருந்த இராவணன் அதிலே நசுங்கினான். உடனே ஈசனை பக்தியுடன் நினைத்து, அந்த பக்தியினால் எப்படியோ வெளியே வந்து தன் சிரத்தை வெட்டி வீணையாக செய்து, தன் ஒரு தோளை வீணை தண்டமாக செய்து,



தன் குடலினை வீணையின் கம்பிகளாக செய்து, அகண்டமான பக்தியுடன் ஸ்வர ராக சகிதமாய் சாமவேதத்தை பாடலானார். அந்த பக்தி கானத்திற்கு மனமுருகி ஈசன் இராவணனிடம் சென்று "நீ என்ன வரம் வேண்டி இப்படி கானம் செய்கிறாய் சொல் அந்த வரம் தருகிறேன்" என்றார். "உங்கள் தயவினால் எனக்கு எந்த குறையுமில்லை. அந்த பிரம்மரே எனது ஜோதிடர். எமன் என் சேவகன், லட்சுமி என் வீட்டில் வாசம் செய்கிறாள். சகல தேவதைகள் என் சேவகர்கள். அப்படிப்பட்ட என்னால் முடியாதது ஏதுமில்லை. ஆனால் நித்தமும் உங்களை சேவிக்கும் என் தாயின் விருப்பம் நிறைவேற உங்களுடன் இந்த கைலாயத்தை என் இலங்கைக்கு கொண்டு செல்ல வந்திருக்கிறேன். ஆகையால் நீங்கள் கைலாயத்துடன் என் நகருக்கு வரவேண்டும். இது தான் என் கோரிக்கை. அதை நிறைவேற்றுங்கள்" என்றான். அதற்கு ஈசன் இராவணா இந்த கைலாயத்தை கொண்டு போய் என்ன செய்வாய்? அதற்கு பதிலாக என் ஆத்மலிங்கத்தை உனக்குத் தருகிறேன். இதனால் உன் இலங்கை கைலாயம் போல் பிரசித்தமாகும். நீ என்னைப் போல் மகிமையுடையவனாவாய் என்று கூறி, ஆத்ம லிங்கத்தை போகும் வழியில் எங்கும் வைக்காமல் நேராக உன் நகருக்கு கொண்டு போய் அங்கு பிரதிஷ்டை செய் என்று கூறி தன் ஆத்மலிங்கத்தை இராவணனிடம் தந்தார் ஈசன். அதை சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்ட இராவணன் ஈசனை வணங்கி இலங்கைக்குப் பயணமானான்.

இதைப் பார்த்த நாரதர், அய்யோ ஈசன் இப்படி ஒரு காரியம் செய்து இராவணனுக்கு மேலும் சக்தியை கொடுத்தாரே என்று நினைத்து இந்திரனிடம் சென்று நடந்ததைக் கூறி இருவருமாக பிரம்மாவிடம் சென்று ஈசன் செய்ததைச் சொன்னார்கள். அவரும் ஏதும் செய்வதறியாது விஷ்ணுவிடம் சென்று நடந்ததைக் கூறினார்.

இராவணன் ஆத்ம லிங்கத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்தால் அவனுக்கு வரும் சக்தியினால் உலகத்திற்கு

நடக்கவிருக்கும் கேடுதனை உணர்ந்து உடனே மகேசனிடம் சென்று "ஏன் இப்படி செய்தீர்கள்" என்றார். "இராவணன் பக்தியினால் செய்த கானத்திற்கு உவந்து அதைக் கொடுத்தேன். அந்த நேரத்தில் இதனால் வரும் கேடுகளை நினைக்கவில்லை. என்று கூறி எல்லோரும் விஷ்ணுவிடம் சென்று நடந்ததை சொல்லி எப்படியாவது நீங்கள்தான் காப்பாற்றவேண்டுமென்று" வேண்டினார் மகேசன். விஷ்ணு சிறிது நேரம் யோசித்து "அந்த ஆத்ம லிங்கம் இராவணன் இலங்கைக்கு கொண்டு செல்வதற்குள் அதை வேறு எங்காவது பிரதிஷ்டை செய்துவிட்டால் இந்த ஆபத்து நீங்கிவிடும்" என்றார்.

திருமால், கணேசனை அழைத்து "யாராயினும் ஒரு காரியம் ஆரம்பிக்கும் முன் உன்னை பூஜிக்கிறார்கள். ஆனால் இராவணன் அப்படி செய்யாமல் ஈசனை துதித்து ஆத்மலிங்கத்தைப் பெற்றுவிட்டான். ஆகையால் நீ சென்று அதை பூமியில் பிரதிஷ்டை செய்ய வேண்டும். அதற்கு ஒரே வழி, இராவணன் இலங்கை செல்வதற்குள் அவனிடம் ஒரு பாலகன் போல் செல். அதற்குள் நான் சூரியனை மறையச் செய்வேன். அந்த நேரத்தில் நாரதர் அவனிடம் குதர்க்கமாக பேசி லிங்கத்தை உன்னிடம் கொடுக்கும் படி செய்வார். நீ அதை பூமியில் பிரதிஷ்டை செய்துவிடு" என்று கூறினார். இதற்குள் முதலில் சென்ற நாரதர் இராவணனை பார்த்து நீ எங்கு இருந்து வந்து கொண்டிருக்கிறாய், என்ன சமாசாரம் என்று கேட்டார். இராவணன் "மகேசனிடம் சென்று ஆத்மலிங்கத்தை பெற்று இலங்கைக்கு சென்று கொண்டிருக்கிறேன்" என்றார். "இந்த ஆத்மலிங்கத்தின் கதை எனக்கு தெரியும். முன்னொரு காலத்தில் பயங்கரமான ஒரு மிருகத்தைக் கொன்று அதன் மூன்று கொம்புகளிலிருந்து மும்மூர்த்திகள் மூன்று லிங்கங்களை பெற்றுக் கொண்டார்கள். இந்த லிங்கம் அதுதான். இதை எவனொருவன் பெற்று பூஜித்தால் அவன் ஈசனுக்கு சமமாவான். அவன் இருப்பிடம் கைலாயத்திற்கு சமமாகும்" என்று விவரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது இராவணன் "நாரதா, லிங்கத்தின் வரலாறு பற்றியும் அதன் மகிமை பற்றியும் கேட்க எனக்கு



நேரம் கிடையாது. நான் சீக்கிரமாக இலங்கைக்கு செல்ல வேண்டும்" என்று கூறினார். நாரதர் "இராவணா சந்தியா வந்தனம் செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதை செய்யாமல் செல்வது உன் போன்றோருக்கு நல்லதில்லை. எனக்கு தெரிந்ததை கூறினேன். பிறகு உன் விருப்பம்" என்றார். அந்த சமயத்தில் கணேசன் பாலகன் போல் அந்த இடத்தில் தென்பட்டான். அவனிடம் சென்று "நீ யார்? உன் தாய் தந்தையர் யார்?" என்று கேட்டான். "நான் உமா, மகேசனின் மகன். உன்னைப் பார்த்தால் எனக்கு பயமாக இருக்கிறது. நான் செல்கிறேன் என்றான்." அப்பொழுது இராவணன் "குழந்தாய் நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். நான் சந்தியா வந்தனம் முடித்து வரும் வரை இந்த லிங்கத்தை பூமியில் வைக்காமல் கையில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதை நீ செய்தால் உனக்கு பொன் ஒளி வீசும் என் இலங்கையை காண்பிக்கிறேன். உனக்கு இஷ்டமானால் நீ அங்கு தங்கலாம்" என்றார். "அரக்கர்கள் வசிக்கும் இலங்கைக்கு நான் வரமாட்டேன். அதுவுமின்றி மிக பளுவாக இருக்கும் இந்த லிங்கத்தை வெகு நேரம் என்னால் தாங்கி சுமக்க முடியாது. என்னை விட்டு விடு, நான் செல்கிறேன்" என்றார். உடனே இராவணன் அவனிடம் மன்றாடி வேண்டி லிங்கத்தை கொடுத்து சந்தியா வந்தனம் செய்ய புறப்பட்டான். அப்பொழுது அந்தப் பாலகன் "என்னால் சுமக்க முடியாமல் நேரிடும் பொழுது மூன்று முறை உன்னை அழைப்பேன். நீ வரவில்லை என்றால் பூமி மீது வைத்துவிடுவேன்" என்று கூறினான்.

இராவணன் சென்று சந்தியா வந்தனம் ஆரம்பித்த உடனே கணேசன் மூன்று முறை இராவணனை அழைத்தான். ஆனால் சந்தியா வந்தனம் முடிக்காததால் இராவணன் வரவில்லை. இதற்காகவே காத்துக் கொண்டிருந்த கணபதி சொர்க்கத்திலிருந்த தேவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீமஹாவிஷ்ணுவை தியானித்து அந்த லிங்கத்தை பூமியில் ஸ்தாபித்தான். தேவர்களெல்லாம் பூமழை பொழிந்தார்கள். பிறகு

வந்த இராவணன் இதைப் பார்த்து கணபதி மேல் கோபம் கொண்டு அடிக்கச் சென்றான். இதை பார்த்த கணபதி ''என் அப்பாவிடம் சொல்வேன்'' என்று சொல்லி ஓடிவிட்டான்.

இராவணன் தனது இருபது கைகளினால் மிகப் பலத்துடன் அந்த லிங்கத்தை பெயர்க்க முற்பட்டான். ஆனால் பூமி அதிர்ந்ததே தவிர லிங்கம் சிறிதளவு கூட நகரவில்லை. மிக பலத்துடன் இராவணன் பெயர்க்க முற்பட்டும் வராததால் இந்த சிவலிங்கம் 'மஹாபலேசுவரர்' என்று பெயர் பெற்றது. இராவணனின் கைகளினால் ஏற்பட்ட அழுத்தத்தினால் பசுவின் காது போன்ற ரூபம் வந்ததினால் இந்த சேத்திரத்திற்கு 'கோகர்ண சேத்திரம்' என்ற பெயரும் வந்தது. இராவணன் என்ன செய்வது என்று அறியாமல் தவம் செய்யச் சென்றுவிட்டான். ஈசுவரன் தன் பரிவாரங்களுடன் அங்கு குடி கொண்டிருக்கிறார். ஆகையால் சகல தேவதைகளும் அங்கு வந்து மகேசனை பூஜிப்பார்கள்'' என்று சித்தர் நாமதாரகனுக்கு கூறினார். இந்த சேத்திரத்தின் மகிமை விவரமாக ஸ்கந்த புராணத்தில் இருக்கிறது என்றும் கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 7

நாமதாரகன் சித்தரைப் பார்த்து ''எனக்கு மேலும் கோகர்ண சேத்திர மகிமையை தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது மேலும் அதைப்பற்றி கூறுங்கள்'' என்று வேண்டினான்.

சித்தர் ''முன்னொரு காலத்தில் இஷ்வாகு வம்சத்தில் மித்திரசகன் என்ற மன்னர் நற்குணங்களைப் பெற்று தர்ம மார்க்கத்தில் நாட்டை ஆண்டு கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் வேட்டைக்குச் சென்று அங்கு ஒரு அசுரனைப் பார்த்து அவனை கொன்றுவிட்டான். அந்த அசுரன் சாகும்முன் தன் சகோதரனிடம் தன்னைக் கொன்ற அந்த அரசனை நீ பழிவாங்கு'' என்று கூறினான். அவன் சகோதரர் தன் மாயையினால் ஒரு சாதாரண மனிதர் போல் வேடமிட்டு திரும்பிச் சென்று கொண்டிருந்த மன்னரைச் சந்தித்து சாதுவாக நடித்து அவரிடம் வேலையில் சேர்ந்தான். மன்னரிடம் மிக நல்லவனாக வேலை செய்யத் தொடங்கினான்.

அந்த மன்னரின் வீட்டில் பெரியோர்களுக்கு சிரார்த்தம் வைக்க வேண்டிய நாள் வந்தது. அதற்கு மன்னர் வசிஷ்டர் முதலிய ரிஷிகளை அழைத்தார். அன்று நடக்க வேண்டிய விசேஷத்திற்கு வேண்டிய சாப்பாடு வசதிகளை கவனிக்க மன்னர் இந்த அசுரனை நியமித்தார். தக்க சமயத்திற்காக காத்திருந்த அசுரன் அன்று தயார் செய்த பண்டங்களில் மனித மாமிசத்தை தந்திரமாக தயார் செய்து வைத்தான். இதைப் பரிமாறியவுடனே பார்த்த வசிஷ்டர் கோபம் கொண்டு மன்னரை பார்த்து "நீ எங்களுக்கு மனித மாமிசத்தை பரிமாறி பெரும் தவறு செய்துவிட்டாய். ஆகையால் நீ பிரம்ம ராட்சனாகிவிடுவாய்" என்று சாபமளித்தார். அப்பொழுது மன்னர் எனக்கு தெரியாமல் யாரோ செய்த தவறுக்கு எனக்கு சாபமளித்தீர்களே என்று கோபம் கொண்டு கையில் நீரை எடுத்து திரும்பி முனிவருக்கு சாபமளிக்க முற்பட்டார். இதைப் பார்த்த அவர்

மனைவி மதயந்தி தடுத்து குருவை சபிப்பது மகாபாவம் என்று கூற, செய்வதறியாமல் மன்னர் சாபஜலத்தை வேறெங்கும் விடக்கூடாதென்பதால் தன் காலிலேயே ஊற்றி கொண்டார். ஆகையால் அன்று முதல் அவருக்கு 'கல்மஷபாதன்' என்ற பெயர் வந்தது. அப்பொழுது அவர் மனைவி மதயந்தி முனிவரிடம் சுவாமி உங்கள் சாபத்திற்கு முடிவை கூறுங்கள் என்று வேண்டினாள். வசிஷ்டர் சிறிது சாந்தமடைந்து பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு பிறகு சாபத்திலிருந்து வெளிப்படுவார் என்று கூறி சென்றுவிட்டார்.

மித்திரசகன் 'கல்மஷபாதன்' என்ற பெயரில் காடுகளில் மனிதர்களையும், மிருகங்களையும் சாப்பிட்டு கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவ்வழியில் பிராமண தம்பதிகள் சென்று கொண்டிருந்தார்கள். கல்மஷபாதன் பிராமணனை பிடித்து சாப்பிட முற்பட்டான். அதைப் பார்த்த அவர் மனைவி கல்மசபாதன் காலில் விழுந்து "வேண்டுமானால் என்னை கொன்று சாப்பிடு. புருஷன் இல்லாமல் விதவையாக வாழ்வது கடினம். வேதங்களை நன்கு அறிந்த இவரை சாப்பிடுவதால் உனக்கு பாவம்தான் வரும். என்னை உன் மகளைப்போல் நினைத்துக் கொள். எங்களை விட்டு விடுங்கள்" என்று எவ்வளவோ மன்றாடினாள். இதை எதையும் அவன் கேட்காமல் அந்த பிராமணனை சாப்பிட்டுவிட்டான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் மனைவி கோபம் கொண்டு தம்பதிகளை பிரித்ததினால் இந்த ராக்ஷஸ சாபம் தீர்ந்து நீ உன் நாடு சென்று உன் மனைவியுடன் சேர்ந்தால் மரணமடைந்து விடுவாய் என்று சாபமிட்டு தன் கணவரின் எலும்புகளை எடுத்து அதனை தீமூட்டி அதில் விழுந்து மரணமடைந்தாள். சிறிது காலத்திற்கு பின் தன் பிரம்ம ராக்ஷஸ சாபம் தீர்ந்து அரசன் தன் நகரத்திற்கு சென்றான். ஒரு நாள் இரவு அவர் மனைவி அவரிடம் வர அவர் தனக்கு காட்டில் பிராமண பெண்ணால் வந்த சாபத்தை பற்றி கூறி அவளைத் தடுத்துவிட்டான். பிறகு இந்த சாபம் தீர தன் புரோகிதர்கள், பெரியோர்கள் ஆலோசனையின்படி பலவகையான விரதங்களை



செய்தார்கள். 101 தீர்த்த யாத்திரைகள் செய்தான். இருந்தும் அந்த பிராமண பிசாசும் அவனைத் தொடர்ந்து கொண்டே இருந்தது. செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்த வேளையில் அவர்கள் கௌதம மகாமுனிவரை சந்திக்க நேரிட்டது. அவரை சாஷ்டாங்கமாக வணங்கி அவருக்கு பாத பூஜை செய்து தனக்கு நேரிட்ட பிராமணப் பெண்ணின் சாபத்தை பற்றி கூறி இந்த துன்பத்திலிருந்து வெளிப்படுவதற்கு வழி கூறுங்கள் என்று வேண்டினான்.

இதைக் கேட்ட கௌதம முனிவர் அரசரை பார்த்து "நீ பயப்பட வேண்டாம். எல்லா பாவங்களைத் தீர்க்கும் மகேஷசனின் கோகர்ண சேத்திரம் இருக்கிறது. இது கைலாசத்திற்கு சமமானது. அங்கு விசுவாமித்திரர் மற்றும் பல முனிவர்கள் தவம் செய்தார்கள். சகல தேவர்களும் அங்கு வந்து மகாபலேசுவரரை பூஜிப்பார்கள். அங்கே இருக்கும் நீரெல்லாமே புண்ணிய நீரே. அங்கே இருக்கும் கற்களெல்லாம் சிவலிங்கங்கள். அங்கு சென்று ஈசனைத் துதிப்பவர்களுக்கு சகல புண்ணியங்களும் கிடைக்கும்" என்றார். அதற்கு அந்த அரசர் "இதற்கு முன்னால் யாராவது அங்கு சென்று தங்களின் பாவங்களைத் தீர்த்துக் கொண்டதற்கு சான்றுகள் இருந்தால் கூறுங்கள்" என்று வேண்டினான். இதைக் கேட்ட கௌதமமுனி "தான் பார்த்த அந்த சேத்திரத்தின் மகிமையை தெரிவிக்கும் ஒரு சம்பவத்தை கூறுகிறேன்" என்றார்.

"ஒரு சிவராத்திரி அன்று நான் அங்கு சென்றிருந்தேன். அங்கே என் அருகில் ஒரு சண்டாள பெண் ஒருத்தி தொழுநோயால் உடல் முழுவதும் புண்களாகி சீழ் பிடித்து ஈக்கள் மொய்த்துக் கொண்டு உடுத்த சரியான துணியில்லாமல், குருடியானவளாக இருந்தாள். அவள் மிக துன்பப்பட்டு சற்று நேரத்திற்கெல்லாம் உயிர் விட்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு கைலாசத்திலிருந்து சிவ தூதர்கள் வந்து இவளை கைலாசத்திற்கு கொண்டு செல்ல முற்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த எனக்கு கடும் ஆச்சர்யம் ஏற்பட்டு சிவதூதர்களிடம் கேட்டேன். இவளைப் பார்த்தால் யாதொரு

புண்ணியம் செய்தவள் போல் தோன்றவில்லையே, உலகிலுள்ள எல்லா பாவங்களையும் செய்திருப்பது போல் தோன்றுகிறது. இவள் எப்படி கைலாசம் போக முடியும். இவள் கைலாசம் செல்ல என்ன செய்தாள் என்பதை எனக்கு விவரமாக கூறுங்கள்'' என்றேன்.

''முற்பிறவியில் இவள் சௌதாமினி என்ற அழகான ஒரு பிராமணப் பெண். இவள் பருவ வயது வந்தவுடன் இவளை ஒரு ஏழை வயதான பிராமணருக்கு கல்யாணம் செய்து வைத்தார்கள். குழந்தை பிறக்காமலேயே சிறிது காலத்திலேயே அவள் கணவன் இறந்து விட்டான். சிறு வயதானதால் காமவசத்தால் அவள் விபசாரம் செய்யத் தொடங்கிவிட்டாள். இது மெல்ல ஊர் மக்களுக்கும் தாய் தந்தையருக்கும் தெரிந்து விட்டது. இவளை ஜாதியிலிருந்து வெளியேற்றினார்கள். அன்று முதல் அவள் பயமின்றி ஒரு வணிகருடன் குடும்பம் நடத்த ஆரம்பித்தாள். அவனின் பழக்கத்தினால் அவள் மது அருந்தி மாமிசத்தை சாப்பிட ஆரம்பித்தாள். ஒரு நாள் மது அருந்திய மயக்கத்தில் சமைப்பதற்காக தன் வீட்டிலுள்ள ஆட்டை வெட்ட வேண்டுமென்று நினைத்து வீட்டின் பின்புறம் சென்று ஆட்டிற்கு பதிலாக பசு கன்றுவை வெட்டி அதன் மாமிசத்தை சமையல் செய்து சாப்பிட்டாள். அடுத்த நாளுக்கென்று அதன் சிரத்தை பத்திரப்படுத்தினாள். காலையில் எழுந்து பாலை கறக்க சென்ற போது அங்கு ஆடுதான் இருந்தது. பசு கன்று காணவில்லை. பயந்தவளாய் வீட்டிற்கு சென்று தான் பத்திரப்படுத்திய சிரத்தை பார்த்தவுடனேயே தான் செய்த தவரை அறிந்து சிவசிவா சந்திரமௌளீஸ்வரா என்று சொன்னாள். தன் கணவன் வந்தவுடனே செய்த தவறை மறைப்பதற்காக கன்றுவை புலி தின்றுவிட்டது என்று பொய் சொன்னாள். இதுபோல் அவள் பல பாவங்கள் செய்தாள். இறந்தபின் அவளை நரகலோகத்திற்கு கொண்டுபோனார்கள். அங்கு அவள் செய்த பாவத்திற்கு தண்டனை அனுபவித்து மீதமுள்ள பாவத்தின் கர்மாவை அனுபவிப்பதற்காக இப்பொழுது இந்த சண்டாள குலத்தில் பிறந்தாள்.



அவள் முன் ஜென்மத்தில் செய்த பாவங்களுக்காக பிறவிக் குருடியாகப் பிறந்தாள். விபசாரம் செய்ததற்காக பிற்காலத்தில் குஷ்ட வியாதி பற்றிக் கொண்டது. சில நாட்கள் அவள் தாய் தந்தையர்கள் அவளைக் காப்பாற்றினார்கள். அவர்களும் இறந்துவிட்டார்கள். பிறகு அவள் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருந்தாள். இப்படி இருக்கையில் அவளுக்கு வயது முதிர்ந்து விட்டது. அவள் முற்பிறவியில் பசு கன்றுவை கொன்ற நேரத்தில் சிவ, சிவ சந்திர மௌளீஸ்வரா என்று சொன்ன புண்ணியத்தினால் அவளுக்கு சிவராத்திரிக்கு கோகர்ணம் செல்ல வேண்டும் என்ற ஆசை உதித்தது. அந்த ஊர் மக்கள் கோகர்ணம் சென்று கொண்டிருக்கையில் அவர்களுடன் இவளும் கோகர்ணம் சென்றடைந்தாள். அங்கு அவள் வருவோர் போவோர்களை எல்லாம் பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அன்று சிவராத்திரி ஆனதால் எல்லோரும் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆகையால் அவளுக்கு சாப்பிடுவதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஒருவர் மட்டும் பூஜைக்காக எடுத்து சென்று கொண்டிருந்த வில்வ இலைகளை அவள் கையில் போட்டார். அவை சாப்பிடுவதற்கு உபயோகப் படாததால் அவற்றை வீசி எறிந்தாள். அவை அப்படி வீசுகையில் பக்கத்திலுள்ள சிவலிங்கம் மேல் விழுந்ததால் அவள் சிவலிங்கத்தை பூஜை செய்தது போல் ஆயிற்று. அன்று முழுவதும் அவள் சாப்பாடு சாப்பிடாமல் இருந்ததால் உண்ணாவிரதம் செய்த புண்ணியம் அவளுக்கு கிடைத்துவிட்டது. பட்டினியால் இரவு முழுவதும் தூங்காமல் ஜாகரனை செய்தாள். அன்று முழுவதும் அவள் சிவ நாம சங்கீர்தனம் கேட்டு கொண்டிருந்தாள். அவளுக்கு தெரியாமலேயே அவள் சிவராத்திரி விரதம் செய்தது போல் ஆயிற்று. ஆகையால் இவள் தான் அறியாமலேயே செய்த இந்த விரதத்தினால் சிவலோகம் செல்ல புண்ணியம் கிடைத்துவிட்டது'' என்று சிவதூதர்கள் கூறி, அவள் மேல் புனித நீரை தெளித்தவுடனே அவள் மேனி பிரகாசமடைந்தது. உடனே அவளை கைலாசம் கொண்டு சென்றார்கள்.

அவள் தன்னை அறியாமலேயே செய்த விரதத்திற்கு இவ்வளவு

தொடங்கினார். இதைப் பார்த்த தாய் "நீண்ட நாட்களுக்கு பிறகு நிலைத்த குழந்தை இவன். அவன் மூடனாக இருந்தாலும் பரவாயில்லை நீங்கள் அவனை அடிக்கக்கூடாது, அப்படி நீங்கள் அவனை அடிப்பதென்றால் நான் தற்கொலை செய்து கொள்வேனென்று" கூறினாள். இதைக் கேட்ட கணவர் வேதனை பட்டு கவலையோடு சிலநாட்களிலேயே இறந்துவிட்டார்.

பிறகு செய்வதறியாமல் பிழைப்பிற்கு வருமானமும் இல்லையென்பதால் அவர் மனைவி அம்பிகை பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தாள். இதைப் பார்த்த ஊர் மக்கள் அவனிடம் "நீ பிராமண குலத்திற்கே அவமானம் தேடித்தருகிறாய். உனக்கு வேதங்கள், சாத்திரங்கள் வரவில்லை. உனக்கு பிச்சை எடுக்கக்கூட தெரியவில்லை. வயதான உன் தாயார் எடுத்து வந்த பிச்சையிலிருந்து சாப்பிட்டு வாழ்கிறாய். நதியிலிருந்து தண்ணீரை கொண்டு வந்து பிழைக்கலாம். அதைக்கூட உனக்கு செய்யத் தெரியவில்லை. நீ பிறந்ததால் உன் முன்னோர்களுக்கும் உன் அப்பா அம்மா அவர்களுக்கும் கெட்ட பெயரை பெற்று தந்துவிட்டாய். நீ வாழ்வதைவிட அந்த நதியில் விழுந்து தற்கொலை செய்துக் கொள்வதே மேல்" என்று சொல்லத் தொடங்கினார்கள். இந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் அவன் நதியில் விழுந்து தற்கொலை செய்யச் சென்றான். அவனைத் தடுப்பதற்கு அம்பிகாவுக்கு சக்தியின்றி, தானும் தற்கொலை செய்வதற்கு நதிக்கரை நோக்கி சென்றாள். அந்த நேரத்தில் ஸ்ரீபாதவல்லபர் குளிப்பதற்காக நதிக்கரைக்கு வந்திருந்தார். அவரைப் பார்த்து அந்த தாய் "சுவாமி இந்த குழந்தை என் மகன். இவன் அறிவில்லாதவன். மிக அறிவும், ஆற்றலும் பெற்று எல்லா வேதங்களையும், சாத்திரங்களையும் கற்ற என் கணவருக்கு இப்படி ஒரு மகன் பிறந்தான். ஊர் மக்கள் எல்லோரும் இவனை அவமதிக்கிறார்கள். இதைப் பார்த்த என் கணவர் அவமானம் தாங்காமல் இறந்து விட்டார். நான் மிக துன்பமடைந்தேன். எல்லா துயர்களையும் போக்கும் உங்கள்



தரிசனம் கிடைத்துவிட்டது. ஒன்றுக்கும் உதவாத இந்த குழந்தையை வைத்துக் கொண்டு வாழ்வதைவிட உயிரை விடுவதையே மேலென்று நினைத்து தற்கொலை செய்துக் கொள்ள போகிறோம். தற்கொலை செய்வதால் வரும் பாவத்திலிருந்து எங்களை காப்பாற்றுங்கள். எனக்கு அடுத்த பிறவியிலாவது மிகச் சிறந்த அறிவு பெற்று உலகம் புகழும் படியான ஒரு மகனை பெறுவதற்கு வரமளியுங்கள்" என்று வேண்டினாள்.

இதைக் கேட்ட ஸ்ரீபாதவல்லபர் "அம்மா தற்கொலை செய்வதினால் உனக்கு அடுத்த ஜென்மத்தில் மேலும் துன்பங்கள் அனுபவிக்க வேண்டிவருமே தவிர வேறு ஒரு பயனும் இல்லை. ஆகையால் நீ இப்பொழுது முதல் சிவபூஜையை செய்ய தொடங்கிவிடு. இதனால் உனக்கு அடுத்த ஜென்மத்தில் என் போன்ற ஒரு மகன் பிறப்பான். அவன் உலகப் புகழ் பெறுவான். முன்னொரு காலத்தில் பிரதோஷ நேரத்தில் ஈஸ்வர ஆராதனையை பார்த்த புண்ணியத்தினாலேயே ஒரு கோபிகா பெண்ணிற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் குழந்தையாகப் பிறந்தான்" என்றார். "சுவாமி நான் நீங்கள் கூறியபடியே செய்கிறேன். ஆனால் ஈஸ்வர ஆராதனையை பார்த்த புண்ணியத்தினால் பகவானை மகனாக பெற்ற அந்த கதையை கூறுங்கள்" என்று வேண்டினாள்.

ஸ்ரீபாதர் "அம்மா! உஜ்ஜையினி நகரத்தை சந்திரசேனன் என்ற அரசர் ஆண்டு கொண்டிருந்தார். அவர் நண்பர் மணிபத்ரர் ஈசனைப் பற்றி தவம் செய்து "சிந்தாமணி" என்றொரு ரத்தினத்தை பரிசாக பெற்றார். அந்த சிந்தாமணி ரத்தினம் சூரியனைப் போல் ஒளிமயமானது. நினைத்ததெல்லாம் தரும் சக்தி பெற்றிருந்தது. இதை அறிந்த சில மன்னர்கள் அதை அடைய வேண்டுமென்று நினைத்து உஜ்ஜையினி நாட்டின் மேல் படையெடுக்க முற்பட்டார்கள். அந்த நேரத்தில் சந்திரசேனரும், மனிபத்ரரும் சேர்ந்து சனி ப்ரதோஷ காலத்தில் சிவபூஜையை செய்து கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த அந்த நகரத்தின் இடையர்களின் குழந்தைகள் (கோப பாலகர்கள்)

புண்ணியமென்றால் நீங்கள் பக்தி பூர்வமாக செய்தால் அதன் புண்ணியம் சொல்ல முடியாது. ஆகையால் நீங்கள் கோகர்ணம் சென்று மகாபலேசுவரரை சேவித்தால் உங்களுக்கு பிராமணப் பெண்ணின் சாபம் நீங்கிவிடும்'' என்று கூறினார்.

கௌதம முனிவர் மேலும் கோகர்ண சேத்திரத்தின் மகிமையை கூறினார். ''சிவ புண்ணியத் தலங்களில் மேன்மையானது கோகர்ணம். இந்த தலத்தை பார்த்து மற்றும் நினைத்துவிட்டால் எல்லா பாவங்களும் தீர்ந்துவிடும். இங்கு இந்திராதி தேவர்கள் எல்லாம் தவம் புரிந்து சிவனுடைய அருளினால் தாங்கள் விரும்பியதை பெற்றுவிட்டார்கள். அங்கு பிரம்மா, விஷ்ணு, இந்திரன், எல்லா தேவர்களும், சூரியன், சந்திரன், எட்டு வசுவுகள் மகாபலேஸ்வரருக்கு கிழக்கு திசையிலும், யம தர்மர், சித்திர குப்தன், அக்னி, பதினொரு ருத்திரர்கள், பித்துரு தேவர்கள், தெற்கு திசையிலும், குபேரர், பத்திரகாளி, வாயு, ஏழு மாதர்கள் வடக்கு திசையிலும், விஸ்வாவசு, சித்தரரதர் மேற்கு திசையிலும் இருந்து அவரை உபாசனை செய்து கொண்டிருந்தார்கள்.

கஸ்யபர், அத்திரி, வசிஸ்டர், கண்வர் முதலிய முனிவர்கள் கிருத யுகத்திலும் விசுவாமித்திரர், ஜபாலி, பரத்வாஜர் முதலான மகரிஷிகள், சநகசநந்தர், நாரதர், சித்தர்கள், முனிவர்கள், யதிகள், எல்லா வேலைகளிலும் அவரை உபாசித்துக் கொண்டிருப்பார்கள். இராவணன் முதலான அரக்கர்களும் இங்கு தவம் புரிந்து வரங்களைப் பெற்றார்கள். இங்கு செய்யும் தவம், ஆன்மீகப் பயிற்சி பலமடங்கு நல்ல பலன்களைப் அளிக்கும்'' என்றும் கூறினார்.

கௌதம முனிவரிடம் அனுமதி பெற்று மித்திரசகன் தன் மனைவியுடன் கோகர்ணம் சென்று மஹாபலேஸ்வரரை சேவித்து சாபத்திலிருந்து விடுதலை பெற்றான்.

நாமதாரகரே கோகர்ண சேத்திரம் இவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதால் ஸ்ரீ பாதவல்லபர் அங்கு மூன்று வருடங்கள் இருக்க நேர்ந்தது.





## அத்தியாயம் 8

''நாமதாரக ஸ்ரீ பாதவல்லபர் கோகர்ண சேத்திரத்தில் மூன்று வருடங்கள் இருந்து, அங்கிருந்து ஸ்ரீசைலம் சென்று நான்கு மாதங்கள் அங்கு வசித்து, பிறகு நிவ்வுர்த்தி சேத்திரத்தில் ஸ்நானம் செய்து குருவபுரத்திற்கு சென்றார். குருவபுரம் கிருஷ்ணா நதிக்கரையில் இருக்கின்றது. அதை இப்பொழுது '' குரு குட்டி'' என்று அழைக்கிறார்கள். ஸ்ரீபாதவல்லபர் குருவபுரத்தில் இருந்ததால் அந்த இடம் உலகப் புகழ் பெற்றது. அங்கு ஸ்ரீ பாதவல்லபரை வேண்டுபவர்கள் எல்லா நன்மைகளையும் பெற்றார்கள். நதிகள் தம்மிடம் வந்த பக்தர்களின் பாவங்களை தீர்த்ததினால் அவைகள் மாசுபடுகின்றன. அப்படி வந்த மாசை ஸ்ரீபாதவல்லபர் போன்ற மகான்கள் வருகையால் போக்கிக் கொள்ளலாமென்று காத்துக் கிடக்கின்றன. ஆகையால் மகான்கள் மனிதர்களின் பாவங்களைப் போக்குவதோடு புண்ணிய நதிகளுக்கும் சென்று அவைகளையும் பவித்திரமாக்குகிறார்கள்.

ஸ்ரீபாத வல்லபர் தன் அவதாரத்தை விட்டு வேறொரு அவதாரம் எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதைப்பற்றி சொல்கிறேன், கேள். குருவபுரத்தில் வேதசாத்திரங்களை நன்கு படித்த பிராமணர் இருந்தார். அவர் மனைவி அம்பிகை ஒரு பதிவிரதை. அவர்களுக்கு நிறைய குழந்தைகள் பிறந்து இறந்தார்கள். அவள் நிறைய விரதங்கள் செய்தாள். புண்ணியத் தலங்களுக்கு சென்றார்கள். தனக்கு ஒரு குழந்தை நிலைக்க வேண்டுமென்று தெய்வங்களை வேண்டினாள். அவள் வேண்டுதலுக்கிணங்க ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் அவன் அறிவில்லாதவன். ஆயினும் நீண்ட நாட்களுக்கு பிறகு பிறந்த குழந்தை ஆனதால் அவனை மிக செல்லமாக வளர்த்தார்கள். தக்க நேரம் வந்தவுடனே அவனுக்கு உபநயணம் செய்து வேதங்களை கற்றுத்தர ஆரம்பித்தார்கள். எவ்வளவு சொல்லியும் அவனுக்கு ஒரு வேதமும் வரவில்லை. துன்பமடைந்த தந்தையார் அவனை அடிக்கத்

தங்கள் வீட்டின் முன்னால் உருண்டையாய் இருந்த கல்லை சிவலிங்கம் போல் வைத்து இலைகளாலும், பூக்களாலும் பக்தியுடன் பூஜை செய்ய ஆரம்பித்தார்கள். மதிய உணவருந்தும் நேரம் ஆனதால் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை உணவு உண்ண கூப்பிட்டார்கள். அதில் ஒரு பையன் உணவருந்த செல்லவில்லை. கோபமடைந்த தாய் பூஜை பொருட்களை கலைத்துவிட்டு அவனை கோபத்துடன் எழுப்பினாள். அவன் பக்தியுடன் தான் செய்யும் சிவ பூஜையை தடுத்து தனக்கு பங்கம் விளைவித்ததனால் கோபமடைந்து தன் உயிரை விடுவதற்கு முற்பட்டான். இதைப் பார்த்த சிவபெருமான் அந்த பாலகன் முன் தோன்றி "உன் பக்திக்கு சந்தோஷமடைந்தேன். என்ன வரம் வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்றார். அதற்கு அந்த பாலகன் ''அறியாமையினால் என் தாய் சிவ பூஜையை கலைத்ததற்கு மன்னியுங்கள்'' என்று வேண்டினான். அதற்கு சிவபெருமான் "நீ செய்துக் கொண்டிருந்த சிவபூஜையை பார்த்ததினால் அவள் அடுத்த ஜென்மத்தில் கிருஷ்ணருக்கு தாய் ஆவாள். நீ எல்லா வளமும் பெற்று சந்தோஷமாக வாழ்வாய்" என்று வரமளித்து சிவபெருமான் அந்த லிங்கத்தில் ஐக்கியமானார். ஆதலால் அந்த லிங்கம் பெரும் பிரகாசத்தைப் பெற்று கதிரவன் போல் பிரகாசமாயிற்று. அந்த இரவு நேரத்தில் அந்த நகரத்தை முற்றுகையிட்ட மன்னர்கள் அந்த அற்புதமான ஒளியைப் பார்த்து ஆச்சரியப்பட்டு இந்த நாடாளும் மன்னர் பெரும் புண்ணியம் செய்தவர் போல் தெரிகிறது. மேலும் அவர் சக்தி வாய்ந்தவராக இருக்கலாம். ஆகையால் நாம் அவருடன் சமாதானமாக போகலாம். இவருடன் பகைவேண்டாம் என்று நினைத்து காலையில் மன்னரை சந்தித்து சமாதானமடைந்தார்கள். சந்திரசேனரும் அங்கு வந்த மன்னர்களும் அந்த பிரகாசத்திற்கு காரணமான அந்த பாலகனை பார்த்து வணங்கினார்கள். அந்த பாலகனுக்கு பரிசுகள் வழங்கி சென்றார்கள். அந்த பாலகனின் தாயார் அடுத்த ஜென்மத்தில் சிவபெருமானின் வரத்தினால் யசோதையாக பிறந்து கிருஷ்ண



பகவானுக்கு தாயானாள். சிவபூஜையை பார்த்த புண்ணியத்தினாலேயே அவள் அப்படிப்பட்ட பாக்கியத்தை பெற்றாள். ஆகையால் நித்யமும் சிவனை ஆராதனை செய்தால் உனக்கு அடுத்த பிறவியில் உலகம் போற்றும் படியான ஒரு மகன் பிறப்பான்'' என்று கூறி, தன் கையை அவன் தலையில் வைத்து ஆசிர்வதித்தார். அவன் உடனே அறிவை பெற்றான். பிறகு அவன் வேதங்களையும், சாத்திரங்களையும் கற்று உலகப் பிரசித்தி பெற்றான். இதைப் பார்த்த அம்பிகா சந்தோஷப்பட்டு ஸ்ரீபாதவல்லபரை வணங்கி அவர் கூறியதைப் போல் அவள் தினமும் பக்தியுடன் சிவபெருமானை பூஜை செய்யத் தொடங்கினாள். ஆகையால் நாமதாரகா இந்த உலகில் குருவின் அருளை பெற்றவர்கள் எவ்வித குறையுமின்றி சந்தோஷத்துடன் வாழ்ந்து முக்தி அடைவார்கள்'' என்று கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 9

சித்தர் சொன்னதைக் கேட்ட நாமதாரகர்- ‘‘சுவாமி ஸ்ரீபாதவல்லபர் மேலும் குருவபுரத்தில் என்ன லீலைகள் செய்தார் என்று கூறுங்கள், கேட்க ஆவலாக இருக்கிறது’’ என்றார்.

அதற்கு சித்தர் ஸ்ரீபாதவல்லபர் தினமும் கிருஷ்ணா நதியில் குளித்துவிட்டு சந்தியாவந்தனம் செய்து பிறகு ஆசிரமத்திற்கு செல்வார். அவர் இப்படி வரும் பொழுது அந்த ஊரில் வசிக்கும் வண்ணான் ஒருவன் பகவானைப் பார்த்து வணங்கி, அவர் செல்லும் வழியை பெருக்கி சுத்தம் செய்வான். இப்படி தினமும் அவன் வணங்குவதை பார்த்த ஸ்ரீபாதவல்லபர் ஒரு நாள் ‘‘மகனே! நீ மிக பக்தியுடன் என்னை தினமும் வணங்குகிறாய். நான் சந்தோஷமடைந்தேன்’’ என்றார். இதைக் கேட்ட பிறகு அவனுக்கு பக்தி அதிகரித்தது. தினமும் சுவாமிகளின் ஆசிரமத்திற்கு சென்று அதை சுத்தமாக பெருக்கி நீரை தெளித்து சுவாமிக்கு வணக்கங்கள் செலுத்தி பிறகு தன் வேலைக்கு சென்றுக் கொண்டிருந்தான். இப்படி சில நாட்கள் கழிந்தன.

பிறகு ஒரு நாள் ஸ்ரீபாதர் அவனை பார்த்து ‘‘மகனே நீ செய்கின்ற இந்த தொண்டுக்கு மிக சந்தோஷமடைந்தேன். உனக்கு அரச பதவி அளிக்கலாமென்று நினைக்கிறேன். உனக்கு சம்மதம்தானா!’’ என்று கேட்டார். ‘‘சுவாமி நீங்கள் உண்மை கூறுபவர். நீங்கள் நினைத்தால் நடக்காதென்பது கிடையாது" என்று சொல்லி சந்தோஷமடைந்தான் அந்த வண்ணான்.

அப்படி இருக்கையில் ஒரு நாள் நதிக்கரையில் இவன் ஆடைகளை துவைத்துக் கொண்டிருக்கையில் அவ்வழியே ஒரு முகம்மதீய அரசர் யானைகள், குதிரைகள் மற்றும் சேவகர்களுடன் நதிக்கரையில் தன் மனைவி மக்களுடன் ஆனந்தமாக நீராட வந்தார். அதைப் பார்த்தவுடனே அந்த வண்ணானுக்கு பிறந்தால் இப்படி அரச குலத்தில் பிறந்து சகல வைபோகங்களை அனுபவிக்க வேண்டுமே



தவிர என் போல் உழைக்கும் பிறவி எடுப்பதில் என்ன பயன் என்று எண்ணம் மனதில் தோன்றியது. உடனே அவனுக்கு முன்னொரு முறை ஸ்ரீபாத வல்லபர் அரச பதவி அளிக்கலாமென்று கூறியது நினைவுக்கு வந்தது. உடனே அவன் ஸ்ரீபாத வல்லபரின் ஆசிரமத்திற்கு சென்று பகவானை பார்த்து வணங்கி நின்றான். அவனை பார்த்தவுடனே இவன் மனதில் ஏதோ ஒரு எண்ணத்துடன் வந்திருக்கிறான் என்று நினைத்து ‘‘மனதில் ஏதோ ஆசையுடன் வந்திருக்கிறாய் என்று தெரிகிறது. அது என்ன என்று சொல்" என்றார்.

அப்பொழுது அவன் ‘‘சுவாமி இன்று ஒரு முகம்மதீய மன்னர் நதிக்கரையில் தன் பரிவாரங்களுடன் நீராட வந்திருந்தார். அவர் ஆனந்தமாக சகல வைபபோகங்களுடன் வந்ததை பார்த்தால் சந்தோஷமாக உள்ளது. ஆனால் உங்கள் பாதங்களின் அருகாமையில் இருந்து புரியும் சேவைக்கு இணையானது ஏதும் இருக்காது. அறியாமையினால் சாதாரண உலகின் சந்தோஷங்களுக்கு ஆசைபடுகிறோம்’’ என்று கூறினான். அதற்கு பகவான் ‘‘பக்தா உனக்கு அரசாளவேண்டுமென்ற ஆசை பிறந்தது. அதை உனக்கு அளிக்கின்றேன். மனதில் தோன்றிய ஆசைகள் நிறைவேராவிட்டால் அவை அடுத்த பிறவி (மறுபிறவி) எடுப்பதற்கு வழிவகுக்கும். ஆகையால் அந்த ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். உனக்கு இந்த பிறவியிலேயே அரசராக வேண்டுமோ இல்லை அடுத்த பிறவியில் அரசராக வேண்டுமோ கூறு’’ என்றார். அதற்கு அவன் ‘‘சுவாமி எனக்கு வயதாகிவிட்டது. வயதான காலத்தில் வைபவங்கள் என்ன அனுபவிக்க முடியும். இளமைக் காலத்தில் அனுபவித்தால் சந்தோஷமாக இருக்கும். ஆகையால் அடுத்த பிறவியில் மன்னராக வரமளியுங்கள்’’ என்று கூறினான். ‘‘அப்படியே ஆகட்டும் நீ அடுத்த பிறவியில் முகம்மதீய குலத்தில் பிறந்து வைடூர்ய நகரத்தை (தற்பொழுது பீதர் என்ற இடம்) ஆள்வாய்’’ என்று வரமளித்தார். அதற்கு அவன் "சுவாமி அடுத்த பிறவியிலும் உங்களின் தரிசனம் எனக்கு கிடைக்க வேண்டும் அதற்கு அருள் புரியுங்கள்’’

என்று வேண்டினான். ''அப்படியே ஆகட்டும். நான் இன்னும் சில நாட்களில் இந்த அவதாரத்தை முடித்துக் கொண்டு 'நரசிம்ம சரசுவதி' என்ற அவதாரமெடுப்பேன். உன் இறுதி காலத்தில் என் தரிசனம் உனக்கு கிடைக்கும்'' என்றார். இதைக் கேட்டு சந்தோஷமடைந்து ஸ்ரீபாதவல்லபரை ஸாஸ்டாங்கமாக வணங்கி தன் வீட்டிற்கு சென்ற உடனே மரணமடைந்தான்.

ஸ்ரீபாதர் இப்படி பல லீலைகள் செய்து பக்தர்களுக்கு அருள் புரிந்து சிலகாலம் குருவபுரத்தில் வாழ்ந்தார். அவர் குருவபுரத்தில் வாழ்ந்ததால் அக்குருவபுரம் மிக பிரசித்தி பெற்றது. அவர் நான் அம்பிகைக்கு என் போன்ற மகன் பிறப்பான் என்று வரமளித்ததால் எனக்கு சமமானவர் யாரும் இல்லை என்பதால் நானே அவளின் கர்பத்தில் பிறக்க வேண்டும். ஆகையால் என் இந்த அவதாரம் முடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நினைத்து புரட்டாசி மாதம் தேய்பிறை துவாதசி திதி, ஹஸ்த நட்சத்திர நாளன்று கிருஷ்ணா நதியில் மூழ்கி மறைந்தார்.

அப்படி ஸ்ரீபாதவல்லபர் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டாலும் அங்கு பக்தர்களுக்கு தரிசனம் தந்து அருள் புரிகிறார். ஸ்ரீபாதரின் பாதுகைகள் குருவபுரத்தில் நிறுவப்பட்டிருக்கின்றன. தற்பொழுது பக்தர்கள் புரட்டாசி மாதம் தேய்பிறை துவாதசி திதியன்று குருவபுரத்திற்கு சென்று ஸ்ரீபாதரை வணங்கி தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஸ்ரீபாதரின் அவதாரத்தினால் குருவபுரம் உலகப் புகழ் பெற்றது.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 10

சித்தர் கூறுவதை சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்த நாமதாரகன் ''கிருஷ்ணா நதியில் மறைந்து ஸ்ரீபாதவல்லபர் வேறொரு அவதாரம் எடுத்தார் என்று சொன்னீர்கள். அப்படியானால் அவர் மறைந்த ரூபத்தில் குருவபுரத்தில் இருந்து கொண்டு பக்தர்களைக் காப்பாற்றுகிறார் என்றும் சொன்னீர்கள். அப்படி நடந்த சம்பவங்களைக் கூறமுடியுமா'' என்று கேட்டான்.

அப்பனே ஸ்ரீபாதவல்லபர் சாட்சாத் கடவுள்தான். அவரின் மகிமைகள் எல்லையற்றவை. ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் அவதாரங்களை முடித்த பிறகும் பக்தர்களை காத்தருள்கிறார்கள் அல்லவா. அதேபோல் ஸ்ரீபாதவல்லபரும். அவருக்கு முடியாதென்பதே கிடையாது. எதையும் செய்யக்கூடிய வல்லமை உள்ளவர். தான் மறைந்த பிறகும் குருவபுரத்தில் பக்தர்களை காத்தருளிய லீலையை கூறுகிறேன் கேள்.

காஸ்யபஸ கோத்திரத்தில் பிறந்த வல்லபேசன் என்றொரு பிராமணன் வாழ்ந்துக் கொண்டிருந்தான். அவன் வணிகம் (வியாபாரம்) செய்கிறவன். அவனுக்கு வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்துக் கொண்டிருந்தது. இதற்கெல்லாம் ஸ்ரீபாதவல்லபரின் அருள்தான் காரணம் என்று எண்ணுபவன். ஆகையால் அவன் ஒவ்வொரு வருடமும் குருவபுரத்திற்கு சென்று ஸ்ரீபாதவல்லபரை வணங்கி தன் வியாபாரத்தை தொடங்குவான்.

ஒரு வருடம் அவன் 'உங்கள் அருளினால் தனக்கு வியாபாரத்தில் நிறைய லாபம் கிடைத்தால் ஆயிரம் பிராமணர்களுக்கு குருவபுரத்தில் குருவின் சன்னதியில் அன்னதானம் செய்வேன்' என்று வேண்டினான். அன்று முதல் அவன் எங்கு சென்றாலும் நினைத்ததைவிட அதிகமாக வியாபாரம் நடந்து அதிக லாபம் வந்துக் கொண்டிருந்தது. தான் வேண்டியதைப்போல் பகவான் தனக்கு அதிக

லாபம் கிடைக்கச் செய்ததினால் தன் வேண்டுதலை நிறைவேற்ற அவன் பணம் எடுத்துக் கொண்டு குருவபுரத்திற்கு புறப்பட்டார்.

வல்லபேசரிடம் பணம் இருந்ததை அறிந்து சில திருடர்கள் பக்தர்களைப் போல் நடித்து அவருடன், தாங்களும் குருவபுரத்திற்கு செல்கின்றோம் என்று கூறி வழித்துணையாக புறப்பட்டார்கள். அவர்கள் காட்டின் வழியாக சென்றுக் கொண்டிருக்கையில் இரவு நேரமாகிவிட்டது. அன்று இரவு அங்கு தங்கி காலையில் பயணம் தொடங்க நினைத்தார்கள். அவர்கள் கொண்டு வந்த உணவை சாப்பிட்டு தூங்கலானார்கள். இதற்காக காத்துக் கொண்டிருந்த திருடர்கள் மெல்ல எழுந்து அவர் தலையை வெட்டினார்கள். அவர் உயிர் பிரியும் பொழுது ஸ்ரீபாதவல்லபரை நினைத்து உயிரை விட்டார். உடனே பக்தர்களின் காப்பாளனான ஸ்ரீபாதவல்லபர் சூலம் ஏந்தி விபூதி, ருத்திராட்சைகளுடன் அங்கு தோன்றி அந்த திருடர்களை சூலத்தினால் கொன்றுவிட்டார். அவர்களில் ஒருவன் பகவானை பார்த்து அவர் காலடியில் விழுந்து "சுவாமி நான் திருடனில்லை. எனக்கு இவர்கள் திருடர்கள் என்று தெரியாததால் இவர்களுடன் வந்தேன். உங்களைப் பார்த்தால் திரிசூலம் ஏந்திய மகேசனைப் போல் தெரிகிறது. உங்களுக்கு சகலமும் தெரியும். ஆகையால் என்னை கொன்று விடாமல் விட்டு விடுங்கள்" என்று வேண்டினான். சுவாமி அவனை மன்னித்துவிட்டு அவனிடம் விபூதியை கொடுத்து வல்லபேசரின் தலையை முண்டத்துடன் சேர்த்து வைத்து அவன் உடல் முழுவதும் விபூதியை தெளிக்க சொல்லி மறைந்தார். அப்படி செய்த உடனே வல்லபேசர் உயிர் பெற்று எழுந்தார். அப்பொழுதுக்கு சூர்யோதயமானது.

இதை எதையும் அறியாத வல்லபேசர் அங்கு இறந்து கிடந்த திருடர்களை பார்த்து இவர்களை யார் கொன்றுவிட்டார்கள். நீ மட்டும் எப்படி தப்பித்துக் கொண்டாய் என்று கேட்டார். "அய்யா இங்கு ஒரு அற்புதமான லீலை நடந்தது. நம்முடன் வந்த இவர்கள் யாத்திரிகர்கள் இல்லை. உங்களிடமுள்ள பணத்தை திருட வந்த திருடர்கள். அவர்கள்



நீங்கள் தூங்கிய உடனே உங்களைக் கொன்றுவிட்டு உங்கள் பணத்தை எடுத்து செல்ல முற்பட்டார்கள். நீங்கள் உயிர் விடும்முன் 'ஸ்ரீபாதவல்லபா' என்று குரலெழுப்பினீர்கள். அந்த நேரத்தில் ஒரு மகான் விபூதி ருத்திராட்சையுடன் கையில் திரிசூலம் ஏந்தி இங்கு தோன்றி அவர்களைக் கொன்றுவிட்டார். அவர் கொடுத்த விபூதியை உங்கள் மேல் தெளித்த உடனே அதன் மகிமையினால் நீங்கள் உயிர் பெற்றீர்கள். இங்கு தோன்றிய அந்த மகான் மகேசனைப் போல் தோன்றுகிறார்" என்றான். தன்னை காப்பாற்றியவர் வேறு யாருமில்லை. தான் வணங்கும் அந்த ஸ்ரீ பாதவல்லபர்தான். அவரின் தரிசனம் தனக்கு கிடைக்கவில்லையே என்று வேதனைப்பட்டார். உடனே ஆனந்தத்தால் குருவபுரத்திற்கு புறப்பட்டு சென்று ஸ்ரீபாதவல்லபரின் பாதுகைகளுக்கு பூஜை செய்து தான் நினைத்ததை விட அதிகமாக நான்காயிரம் பேருக்கு அன்னதானம் செய்தார்.

இப்படி ஸ்ரீபாதவல்லபர் மறைமுகமாக தன் பக்தர்களுக்கு அருள் புரிந்து எல்லா செல்வங்களை தந்துக் கொண்டிருக்கிறார். நல்லோருக்கு அவர் தரிசனம் தருகிறார். அவர் ஸ்ரீ நரசிம்ம சரசுவதி என்ற வேறொரு அவதாரமெடுத்து உலகத்தை காப்பாற்றுகிறார். அவரின் பெயரை சொன்ன மாத்திரத்தில் தன் பக்தர்களுக்கு அவர்கள் வேண்டியதை தந்து அருள்புரிகிறார். அவரை,

'திகம்பரா திகம்பரா ஸ்ரீபாத வல்லப திகம்பரா
திகம்பரா திகம்பரா அவதூத சிந்தன திகம்பரா'

என்று துதித்தால் அவரின் ஆசி கிடைக்கும்" என்று சித்தர் கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*

